எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவின்தரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 10 கற்பனை 3] திருச்சி 15—3—67 [தனிப் பிரதி 25 காசு

"துயருண்டோ துணிவுள்ளோர்க்கு"

[ரெட்டியார்]

உலக நாடுகள் பலவற்றில் பலரைக் கொன்று பலரைத்தூக்கு மேடைக்கு அனுப்பி ஆட்சியைக் கைப்பற்ற இராணுவ பலத்துடன் அரசியல் புரட்சி நடத்துவது இப்பொழுதும் நடைபெற்று வருகிறது.

பாரத நாட்டில், ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் ஆட்சியை, எதிர்க் கட்சிகள் கைப்பற்றி, வெற்றிப் பெருமிதத்துடன் பல இராஜ்யங்களில் அவை ஆட்சி பீடங்களில் அமரும் காட்சி ஒருவார காலத்தில் நடைபெற்று முடிந்தது.

பாரத சமுதாயம் உகலத்திற்கு ஒரு புதுமை என்றான் பாரதி. அந்தப் புதுமையைக் கண்டு, கேட்டு அகில உலகமே திகைக்கிறது. "ஜனநாயகம்" என்ற உரிமையின் மூலம் மக்கள் தம் ஆட்சியை மாற்றும் அதிகாரத்தை பாரதக் குடியரசு வழங்கியிருக்கிறது. பாரத நாட்டின் அரசியல் சாஸனத்தில் இந்த மகத்தான உரிமையை தேச மக்களுக்கு வழங்கிய அறிஞர்கள் ஒரு கணம் சிந்தித்தார்கள்.

தேச மக்கள் இந்த உன்னத லட்சியத்தின் தன்மையை உணர்ந்து அதனை சரியான வகையில் பயன்படுத்துவார்களா என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது.

ஒரு லட்சியத்தை உருவாக்கும் போது மக்களுடைய தன்மையை உணர்ந்தே அதனை உருவாக்குவது அறிஞர்களின் கடமை. இருநூறு வருட அந்நிய ஆட்சியில் வீட்சியுற்றிருந்த ஒரு நாட்டில் மக்களின் சுய சிந்தனையை எண்ணிப் பார்ப்பது முடியாத காரியம் என்பதையும் அறிந்தார்கள்.

எந்த ஒரு உண்மையும் மக்களின் அனுபவத்தாலேயே விளக்கம் பெறுதல் வேண்டும். அனுபவம் பெறுவதற்குள்ள வழியை நாம் திறந்து வைக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை அறிந்தார்கள்.

மக்கள் ஜனநாயகத்தின் தன்மையை உணர்ந்து தங்களுக்கு ஏற்றதான ஆட்சியாளரை தேர்ந்தெடுப்பதில் தங்கள் அனுபவ ஞானத்தை என்றாவது ஒரு நாள் பயன்படுத்தியே தீருவார்கள். அதற்கு முன்னர் பல தவறுதல்கள் ஏற்படலாம். கூட்டத்தில் கூடி நின்று, கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தைக் கொள்ளாத சிலரின் வாய் வார்த்தைகளை நம்பி மக்கள் தவறு செய்யலாம். தங்கள் தவறுதலின் பயனை ஓரிரு முறைபட்டுத் தெரிந்தால், சூடுகண்டால் பின்னர் தம்மிடமிருக்கும் அதிகாரம் என்ன என்பதை பூரணமாக மக்கள் அறிவார்கள் என்ற நம்பிக்கையோடு, தைரியத்தோடு, மெய்த் துணிவோடு பாரத நாட்டில் 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் 'வாக்குரிமை' வழங்குவது என முன் வந்தார்கள்.

காங்கிரஸ் இந்நாட்டின் பொறுப்பை ஏற்றது. ஒரு துறையிலே முன்னேறிய மக்கள் ஒரு சாரார். அவர்கள் அறிவிலும், ஆட்சி நுணுக்கத்திலும் தேர்ந்தவர்களாக விளங்கினார்கள்.

ஒரு பக்கத்திலே ஒண்டக் குடிசையுமில்லாமல், மனித உருவம் பெற்றும் மனிதர்களென மதிக்கப்படாமல் மற்றவர்களால் மிருகங்களைப்போல் நடத்தப் பெற்றும், கல்வி, கேள்வி, ஞானம் எதுவும் அற்றவர்களாக விளங்கிய ஒருசார்பு மக்களையும் கண்டார்கள்.

இந்த இரு சாராரையும் ஓர் நேர் கோட்டுக்குள் கொண்டு வராத வரையில் அரசியல் ஞானம் எல்லா மக்களுக்கும் ஏற்பட முடியாது.

அதுவும் தவிர, சாதி தாழ்வு, உயர்வு என்ற பேதமும், பொருளாதார சமத்துவ நிலையும் ஓர் நேர் கோட்டுக்குள் கொண்டுவந்தாக வேண்டும்.

இந்த லட்சியத்தில் வெற்றி பெற காங்கிரஸ் சென்ற இருபது ஆண்டுகளாக பாடுபட்டது. முடி மன்னர்கள் மகுடம் இழந்தார்கள், ஜமீன்தார்கள் ஜாகீர் இழந்தார்கள், நிலப்பிரபுக்கள் நிலவுடமை கட்டுப்பாடாயிற்று, தாழ்ந்த மக்களுக்கு கல்விச் சலுகை தொழிற் சலுகை, உத்தியோகச் சலுகை, இன்னும் எத்தனையோ செயல்கள் நடைமுறையில் அமுலாக்கப்பட்டன.

அன்னியர்கள் இந்நாட்டை விட்டு வெளியேறும்போது தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் பொருளுக்கு இந்த நாட்டை ஒரு சந்தையாக வைத்திருந்த காரணத்தால் எங்குபார்த்தாலும் தரிசு நிலங்களே காணப்பட்டன. குண்டூசி செய்வதற்குக்கூட சக்தியற்ற நிலையில் இத்தேசம் இருந்ததை எவரும் மறந்துவிட முடியாது.

காங்கிரஸ் எங்கு பார்த்தாலும் அணைகள் கட்டி, தரிசு நிலங்களை நஞ்சை நிலமாக்கி பல வகையிலும் தொழில் வளம் பெருக இந்த நாட்டிலே மகத்தான சேவை செய்திருக்கிறார்கள். தான் இதுவரை செய்த சேவையையும், திட்டங்களையும் நாட்டு மக்கள் உணர்வார்கள் என்ற ஒரு நம்பிக்கையே காங்கிரஸ் கட்சியின் கொள்கை பிடிப்பாக இருந்தது.

வெளி நாட்டார் ஆண்டபோது உணவு, உடை அனைத்தும் வெளி நாட்டவரின் கையை எதிர் பார்த்தே நாம் வாழ வேண்டிய நிலை இருந்தது. அப்போது ஏதோ சொற்ப நிலம் படைத்தவர்கள் தங்களின் நிலங்களில் விளைந்த தானியங்களை களஞ்சியங்களில் கொட்டி வைத்து சொற்ப விலைக்கு மக்களுக்கு விற்று வந்தனர்.

சுய தேவைப் பெருக்கத்தின் காரணமாக புதிய முயற்சிகள் மேற்கொண்டதனால் விவசாய பயிர் செலவு அதிகமாகத் தலைப்பட்டது. தொழிற்சாலை பற்பல திறந்ததினால் கிராம மக்களின் பெரும் பகுதியினர் நகர் வாசத்தை அடைந்தனர். விவசாயத் தொழிற் கூலி கிடைக்காமல் நிலம் படைத்தவர்கள் நிலத்தை தரிசாக போட முடியாமலும் விவசாயம் செய்ய முடியாமலும் தவித்தார்கள்.

இந்த நிலையில் அரசாங்கம் இதை உணர்ந்து நாடெங்கிலும் மின் விசையை பரப்பியும், மாடு வாங்கவும், கிணறுவெட்டவும், விவசாய அபிவிருத்திக்காக கடன் வழங்கவும் முன் வந்தது. எனவே, அழிந்து கொண்டிருந்த விவசாயத் துறை ஒருவாறு புத்துயிர் பெற்றது.

ஏழை எளியவர்களுக்கு இலவசக் கல்வி வசதி அரசாங்கம் அளித்தது. மதிய உணவும், சீருடை வழங்குதலும் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பெரும் பணிகளாகும். இத்தனை நல் முறையில் அரசாங்கம நாட்டு மக்களுக்கு சேவை செய்தும், மக்களிடையே ஒரு அதிருப்தி நிலவியதற்குக் காரணம் ஏதோ ஒன்று இருக்கத்தான் வேண்டும்.

அந்தக் காரணம் என்ன என்பதை நடு நிலையாக இருந்து சிந்தித்தால் ஆட்சியில் உயர்ந்த லட்சியவாதிகள் இருந்து உத்திரவு பிறப்பித்தாலும் அதை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டிய சில்லரை அதிகாரிகள் எடுத்துக் கொண்ட கடுமையான நடவடிக்கைகள், செயல்கள், சுய நோக்கங்கள், காங்கிரஸ் ஆட்சியின்மீது ஒரு வெறுப்பையே சம்பாதித்துக் கொடுத்தது. பொதுவாக, காங்கிரஸ் அரசாங்கத்தாரால் கல்விச் சலுகையும், தொழிற் சலுகையும், உத்தியோக சலுகையும் பெற்ற ஒரு சாரார் தங்கள் கடமையை மறந்தார்கள். தங்கள் பால் பரிவு கொண்டு அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையும் தங்களுக்கு ஆட்சி கொடுக்க வேண்டிய உரிமை என்றே மதித்தார்கள்.

“நாய் வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டி நற்றமிழை எழுத எழுத்தாணியாமோ, பேய் வாழும் சுடுகாட்டை பெருக்கித் தள்ளிபெரிய விளக்கு ஏற்றிடினும் வீடதாமோ” என்ற இந்த முதுமொழிக்கு ஒப்ப எத்தனை செய்தாலும் அதை மறந்து தாங்கள் தங்களுடைய பாரம்பரிய குணத்திலே அந்த மக்கள் லயித்தது. அது மட்டுமல்ல; செய்நன்றி மறந்து நன்றியைக் கொன்றவர்களாக அவர்கள் விளங்கியது தான் ஆச்சரியமே அல்லாது காங்கிரஸ் தோல்வியடைந்தது ஆச்சரியமில்லை.

அறிவுத் துறையிலே நாட்டு மக்களை அழைத்துச் செல்ல வேண்டிய கடமை மிக்க ஒரு பகுதியினர், தேச விடுதலைக்கு அல்லும் பகலும் உழைத்த ஒரு பகுதியினர், ஆத்திர உணர்ச்சி வசப்பட்டு ஆதங்கம் மேலிட்டு பிணங்கி நின்றது தேசத்தின் பாபம். ஜமீன்தார்களும், ஜாகீர்தார்களும், அரசியல் உணர்வால் கல்வி கற்ற மாணவர்களும், அறிவுத்துறைக்குத் தலைமை தாங்குபவர்களும், தாங்கள் என்றும் தாழ்ந்தவர்களே என்று செய்கையால் நிரூபித்தவர்களும், தங்கள் லட்சியத்தை மறந்து காங்கிரசுக்கு விரோதமாக நின்றார்கள். காங்கிரஸ் தோல்வியடைந்தது.

காங்கிரஸ் தோல்வியடைந்தது என்றால் காங்கிரஸ் லட்சியங்கள் தோல்வியுற்றது என்பதல்ல, காங்கிரஸ் கொள்கைகள் தோற்று விட்டன என்பதும் அல்ல, காங்கிரஸின் சேவை புறக்கணிக்கப்பட்டது என்பதும் அல்ல, காங்கிரஸை வேண்டாமென்று மக்கள் ஒதுக்கி விட்டனர் என்பதும் அல்ல. காங்கிரஸால் இதுவரை பெற்று வந்த நன்மைகள் ஒரு கட்டுப்பாட்டிற்கு வந்திருக்கிறது என்பதுதான் பொருள்.

வேறு எவர் ஆட்சிக்கு வந்தபோதும், காங்கிரஸ் இதுவரை பின்பற்றி வந்த நடைமுறைகளை, கொள்கைகளை, லட்சியங்களை புறக்கணித்து விட்டு ஆட்சி செய்ய முடியாது என்பது தான் பொருள்.

காங்கிரஸ் இதுவரை நாட்டு மக்களுக்கு செய்த சேவைகளை விட அதிகமான சேவையை செய்து விடுவார்கள் என்ற நம்பிக்கையும் மக்களுக்கு இல்லை. எவர் ஆட்சியில் இருந்தாலும் காங்கிரஸ் இருபது ஆண்டுகளாக கட்டிய

15-ஆம் பக்கம் பார்க்க

கனவு 10] பராபவ, பங்குனி 15-3-67 [கற்பனை 3

காமராஜ் வாழ்க

உலக அரசியல் வாதிகள் முன்னிலையில் தலைவர் காமராஜ் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கிறார். பாரத அரசியல் முதல்வரை தேர்ந்தெடுப்பதில் காமராஜ் அவர்களின் சேவை உலக அரசியல் வாதிகள் கண்களை திறக்க வைத்திருக்கும் என நம்புகிறோம்.

ஜனநாயக சோஷியலிசம் என்னும் பெரும் லட்சியத்தின் ஆதார புருடராக விளங்கும் காமராஜ் அவர்களை அரசியல் சதுரங்கத்தில் வீழ்த்திவிட பெருந்தலைகளும், பெரியவல்லரசுகளும் சின்னஞ்சிறு மாணவர்களை சதுரங்கக்காய்களாக வைத்து அரசியல் சூதாட்டம் ஆடிப்பார்த்தது.

தன் தோல்வியைப் பற்றி தேசம் கலங்க, தான் கலங்காது, காங்கிரஸின் தோல்வி ஒன்றையே கருதி மனம் வருந்திய காமராஜ் ஜனநாயகத்திற்கு தலை வணங்கி புதிய ஆட்சியாளர்களுக்கு நல்வரவு கூறி ஆசியளித்திருப்பது, அவரது உறுதியான நிலையும், தேச பக்தியுமே காரணங்களாக அமைந்தது. அது மாத்திரமல்ல தனது தலைமையில் இயங்கும் அகில இந்திய காங்கிரஸை—காங்கிரஸையே எதிர்த்து ஆட்சிக்கு வந்திருப்பவர்களுக்கு சாதகமாக ஒரு தீர்மானம் நிறைவேற்ற வைத்தது காமராஜ் அவர்களுக்கு ஜனநாயகத்தில் இருக்கும் பற்றும், தேசத்தின் மீதுள்ள பாசமும், மக்கள் மீதிருக்கும் பரிவுமே காரணம் எனக் கூறலாம்.

அறியாமையால் தவறு செய்யும் குழந்தைகளை தந்தை மன்னித்து மறந்துவிடுவது போல தனக்கே தன்னுடைய அரசியல் கௌரவத்திற்கு வினைவிதைத்தவர்களும் கேட்டு மனம் கலங்கும்படி அவரது தேர்தல் முடிவு இருந்தது என்றால் அவர் தோல்வி பெற்றார் என்பது எங்ஙனம் பொருந்தும்.

காமராஜ் தன் உடல் நலிவையும் பொருட்படுத்தாது பாரத நாட்டின் பிரதமர் தேர்தலை ஒரு முகமாக நடத்தி வைக்க அவர் எடுத்துக் கொண்ட பிரயாசை, அவர் சொல்லுக்கு பார்லிமெண்டு அங்கத்தினர்கள் காட்டிய மரியாதை, எதற்கும் விட்டுக் கொடுக்காத, எவருக்கும் சலித்துப் போகாத, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றுள்ள மொரார்ஜி மனதினிற்குக் கூட ஒரு ஆறுதலைத் தந்திருக்கிறது என்று சொன்னால் காமராஜுனுடைய கவுரவமும், தேசத்தில் ஒரு படி மேலும் உயர்ந்தே உள்ளது என்பதுதான் பொருள்.

சோவியத்து நாட்டிற்கு காமராஜ் விஜயம் செய்தது பலருக்கு அச்சத்தை ஊட்டி இருக்கிறது. அந்த அச்சத்தின் விளைவே காமராஜருக்கு எதிராக பல சக்திகள் ஒன்று திரண்டு எதிர்த்தன என்பது வெளிப்படை.

தலைவர் காமராஜ் காங்கிரஸ் தலைமை பீடத்தில் வீற்றிருக்கும் வரை, எதிர்க்கட்சிகளாக இருந்து இன்று ஆட்சியாளராக மாறியிருக்கும் கட்சியினர் ஒருவாறு நிம்மதியாக ஆட்சி புரியலாம். தேசத்தலைவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஜனநாயக பண்பை மீறாமல் மக்கள் நடந்து கொள்வார்கள் என்று உறுதியாக நம்பலாம்.

தேசத்தின் பொறுப்பு, தலைவர் காமராஜ் அவர்கள் மீது ஏற்றப்பட்டிருந்தாலும், அதைத் தக்கவரிடம் ஆட்சி நடைபெற சரியான வழியில் திருப்பிவிட்டு மீண்டும் மக்களிடையே தொடர்பு கொள்ள முன்வர வேண்டும் என்று நாம் பணிவோடு அவரை அழைக்கின்றோம்.

தலைவர் காமராஜ் தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் ஜனநாயக சோஷியலிசத்தைப் பற்றியும், காங்கிரஸ் லட்சியங்களைப் பற்றியும் மக்களிடையே நேரிடையாகப் பேச வேண்டும் என்பதே நமது விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்.

தலைவர் காமராஜ் மக்களிடையே நேரடித் தொடர்பை கொள்ள முனைந்து விட்டால் மக்கள் தொடர்பு காங்கிரசுக்கு வலுப்படுவதோடு, காங்கிரஸ் கட்சியின் பலம் பெருகும் என்பதில் சந்தேகமில்லை. மதமதத்து, எப்படி இருந்தாலும் ஆட்சிக்கு காங்கிரஸே வரும் என்று இருந்த காங்கிரஸ் ஊழியர்கள் மனம் திருந்தவும், தெளிவடையவும் அவர் ஒருவரால்தான் செய்ய முடியும் என்று நம்புகிறோம்.

ஆட்சியில் இருப்பவர்களின் கையை வலுப்படுத்த கட்சி ஊழியர்களும், கட்சி ஊழியர்களை சரியான வழியில் நடத்திச் செல்ல ஆட்சியிலிருப்பவர்களும் தவறிப் போனார்கள். காமராஜ் சென்னை அரசியலை விட்டு அனைத்திந்திய பொறுப்பு ஏற்றதும் ஆட்சிக்கு வந்தவர்கள், ஆட்சிக்கு உதவுபவர்கள் யார்? கட்சிக்கு உதவுபவர்கள் யார்? உண்மையானப் பற்றும் உடையவர் யார் என்பவற்றை மறந்து ஒரு நிமிடம் நின்று விட்டார்கள்.

ஒரு காலத்தில் ராஜாஜி அவர்களின் மூளைக்கு சமமான மூளை படைத்தவர் என்று போற்றப்பட்டார் பக்தவத்சலம். ராஜாஜியோடு தொடங்கிய காங்கிரஸ் ஆட்சி பக்தவத்சலத்தோடு ஓய்வு பெற்றது.

ஓய்விலிருந்து காங்கிரஸ்காரர்களின் மனதிலே உள்ள தோய்வை மாற்றி துணிவு உண்டாக்குவதற்கு வல்லவர் காமராஜ் ஒருவரே. அந்த ஒருவர் உயிருடனிருப்பது நமது பாக்யம். காமராஜரின் செல்வாக்கு கிரகணத்தால் ஏற்பட்ட ஒரு முகூர்த்த கால மங்கலுக்குப் பின்னர் சுயம் ஜோதியோடு பிரகாசிக்கவும் அந்த ஜோதி ஒளியில் தமிழ் மக்கள் நல்ல அரசியல் ஞானம் பெறவும், இது தக்க தருணம்.

கிரகங்கள் மாறியிருக்கின்றன. நாட்டில் எத்தனையோ சோதனைகளும், வேதனைகளும் எழலாம். அவை அத்தனையும் தாங்கும் இதயம் மக்களுக்கு ஏற்படச் செய்ய உள்ள ஒரே தலைவன் காமராஜ். அந்த பெருந்தலைவன் நெடுநாள் வாழ்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல வழிகாட்ட இறைவன் கிருபை செய்ய வேண்டும் என்று நல்ல தமிழ் மனதோடு நாம் யாவரும் இறைவனை வழுத்துவோமாக!

—அ. வெ ர. கிருஷ்ணசாமி.

ஜனநாயகத் தேர்

—[டி. எல். பஞ்சாபகேசன்]—

★

ஓர் சிற்றூராக இருந்தாலும், நகரமாயிருந்தாலும் ஆண்டுக்கு ஒருமுறை ஒரு நாளாவது குதூகலமாயிருப்பார்கள் ஆங்காங்கு உள்ள மக்கள் விழாக்கள் கொண்டாடுவதின் மூலம். ஆங்காங்கே வசித்துவரும் மக்களின் மதம், இனம் இவைகளின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப அவ் விழாக்கள் பலவாறுக அமையலாம். இவ்விதம் விழாக்கள் எடுத்து தங்கள் குதூகலத்தை வெளிப்படுத்துவது என்பது உலகில் உள்ள அனைவருக்கும் இயல்பாக வந்து இன்று பழக்கமாகிவிட்டது.

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்ற பிராட்டியாரின் முதுமொழியில் உண்மை எவ்வாறு பொதிந்து கிடக்கின்றது என்பதை ஆராய்ச்சி செய்தால்தான் புலப்படும். நாள்தோறும் உழைத்துத் தேய்ந்து போன பாட்டாளி மக்கள் ஒருநாளாவது குதூகலத்தோடு இருப்பதற்குத்தான் கோவில் என்று ஒன்றை ஏற்படுத்தி, ஆண்டுக்கு ஒருமுறையாயினும் திருவிழாக் கொண்டாடவும் ‘தேர்’ பவனி வரவும் என்னும் பழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்தார்கள். ‘தேர்’ எப்படியோ பலருடைய முயற்சியாலும், பொருட் செலவாலும், உடலுழைப்பாலும் நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார்கள். அன்றோடு அந்த விழா முடிவடைகிறது விழாவில் கலந்து கொண்ட மக்களில் பெரும்பாலோர் அடுத்த ஆண்டு வரை அப்பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை தேர் ஒரு முறை ஊரைச் சுற்றி வலம் வரும் போது அதில் தூசிகள் சேர்ந்து பல பூச்சிகளுடன் நிலைக்கு கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார்கள், மறு ஆண்டு திருவிழா வரும் முதல் நாள்தான் அத் ‘தேர்’ எப்படியிருக்கிறது என்று கோவில் நிர்வாகிகள் கவனித்து செப்பனிட முயற்சிப்பார்கள். அவர்கள் முயற்சியில் சில ‘தேர்’ செப்பனிட முடியாதவாறு பழுதடைந்து போய் விடுவதும் உண்டு. அதனால் திருவிழா சில இடங்களில் நடைபெறாமல் நின்றுவிடுவதும் உண்டு.

“தேர்” பழுதுறாமல் காக்கப்பட்டு வரும் இடங்களில் ஆண்டுதோறும் விழாக்கள் நல்ல முறையில் நடைபெறுவதும் உண்டு.

ஓர் சிற்றூராயினும் அங்கு கோவில் இருக்கும். விழாக்கள் நடக்கும் குதூகலமாகக் கொண்டாட அக் கோவிலுக்கு ‘தேர்’ இருக்காது. அக்குறையை நிவர்த்திக்க சிலர் முன்வந்து ‘தேர்’ தயாரிக்கத் திட்டமிட்டு வேலையைத் துவங்குவார்கள் இதைக் கேள்விப்பட்ட சிற்றூர் வாசிகள் அனைவரும் தங்கள் தங்களாலியன்ற உதவியைக் கொடுத்து ‘தேர்’’ தயாரித்துவிடுவார்கள். தேர் நல்ல முறையில் பலருடைய ஒத்துழைப்பால் தயாராகி, வெள்ளோட்டம் விட்டு விழாவின் போது பவனி வரும் காட்சியைக் கண்டு மகிழ்ந்து நிற்பார்கள் ‘தேர்’ தயாரித்த முதல் ஆண்டில். ‘தேர்’ தயாரித்து பவனி வந்த ஆண்டில் இருந்த ஊக்கமும் உற்சாகமும் நாளா வட்டத்தில் ஆண்டுகள் ஆக ஆக மக்களில் பலருக்கு ‘தேர்’ என்பது ஒன்று இருப்பதையே மறந்து விடக்கூடிய நிலையில் இருப்பதையும் சில இடங்களில் இன்று நாம் காண்கின்றோம்.

பாரத நாட்டின் “ஜனநாயகத்தேர்” பலருடைய தியாகத்தின் சின்னமாக 1952ல் இந்நாட்டில் பவனிவர ஆரம்பித்தது. இத்தேர் ஐந்து ஆண்டுக்கு ஒருமுறைதான் பவனி வரும். 1952ல் பவனி வரும்போது அத் தேர் நல்ல முறையில் பவனி வர பாரத மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும் அதற்காக அவர்கள் காட்டிய உற்சாகமும் இன்று நினைத்துப் பார்த்தால் கனவு போல் வந்து மறைந்து விடுகிறது. நாட்டின் விடுதலையை வாங்கித் தந்த “காங்கிரஸ்” மகாசபைதான் பலருடைய உதவியால் ஜனநாயகத் தேரை இந் நாட்டிற்கு தயாரித்து அளித்தது. ‘கோவில் தேர்’ பல சிற்பிகளால் தயாரிக்கப்படுவது எப்படி உண்மையோ அதேபோன்று ஜனநாயகத் தேரும் பல தியாக புருஷர்களாலும், மேதைகளாலும் சட்ட வல்லுநர்களாலும் தயாரித்தளிக்கப்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது.

முதல் முறையாக பவனி வந்து நிலையில் நின்ற “ஜனநாயகத் தேர்” நல்ல பாதுகாப்பாக வைக்காமல் விடப்பட்டதால் அதில் தூசி படர ஆரம்பித்தது. தூசி கொஞ்சம் படர ஆரம்பித்தவுடன் அதை உடனே துடைத்திருந்தால் அத்தேர் அப்படியே அழகு குன்றாமல் இருந்திருக்கும். கவனக் குறைவாகயிருந்த காரணத்தால் சிறிய தூசியாக படர்ந்திருந்தது, நாளா வட்டத்தில் அதன் அழகைக் கெடுக்கும் அளவுக்கு அழுக்கும் அதில் ஏறிவிட்டது.

1957ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக ‘ஜனநாயகத் தேர்’ பாரத நாட்டில் பவனி வர ஆரம்பித்தது அத்தேரில் இருந்த தூசியையும் அழுக்கையும் போக்கி தேரை பவனிக்கு விட்டிருக்க வேண்டும். தூசியும் அழுக்கும் தேரை ஒன்றும் செய்யாது என்று கருதி தேரை அப்படியே பவனிக்கு அனுப்பிவிட்டார்கள் சிருஷ்டி கர்த்தாவான காங்கிரஸ் மகாசபையினர். பவனி வரும் நேரத்தில் தூசியும் அழுக்கும் அத்தேரில் இருந்ததால் சிறு சிறு குழவிகள் அதில் வந்து குடியேறி விட்டன. தேரின் மீது அழுக்கும் தூசியும் அதிகம் படர்ந்திருந்ததால் இக் குழவிகள் தேரைத் துளைக்காது என்று கருதிவிட்டார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது தூசி. அழுக்கு குழவி மூன்றும் 1957 முதல் 1962 வரை ஐந்து ஆண்டுகள் அதில் வாசம் செய்ய விட்டுவிட்டார்கள். ஆட்சியில் அமர்ந்திருந்தவர்கள். தூசியாகவும் குழவியாகவும் சில சுயேச்சைவாதிகளும், பொது உடைமைக்காரர்களும் ஆட்சியில் அங்கம் வகிக்க ஆரம்பித்தனர் அன்று.

1962ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாக ஜனநாயகத் தேர் தூசியோடும், அழுக்கோடும், குழவிகளோடும் பவனிவர, காத்திருந்த பலவித வண்டுகள் அதில் குடியேறி, தூசியையும் அழுக்கையும் உண்டு விட்டு குழவிகளோடு உறவும் கொள்ளாமல் ஐந்து ஆண்டுகள் முடிய அதில் தானும் ஒண்டுக் குடித்தனம் நடத்தி வந்தன. இன்று பல மாநிலங்களில் ஆட்சிக்கு வந்துள்ள பிற கட்சியினரை வண்டுக்குச் சமமாக ஒப்பிடுவதில் தவறு ஏதுமில்லை.

1967ஆம் ஆண்டில் “ஜனநாயகத் தேர்” பவனிக்கு வரும் முன்பே, தூசி, அழுக்கு, குழவி வண்டு இனங்கள் பல அனைத்தும் ஒன்று சேர்ந்து தேரினையே தங்களுக்கே உரியதாக்க திட்டமிட்டார்கள். பவனியில் அமர்ந்தார்கள். ஓரளவு அவர்கள் வெற்றியும் இன்று கண்டுவிட்டார்கள். இவர்கள் அனைவரும் ஒருங்கே சேர்ந்து பவனி வருவதைக் கண்ட மரத்தை தின்னும் கரையான்களும் பவனி வரும் போது அவர்களோடு ஒட்டிக் கொண்டு தங்களுக்கும் பங்கு வேண்டும் என்னும் அளவுக்குத் துணிந்து விட்டார்கள் இன்று.

1967ஆம் ஆண்டில் மார்ச்சுத் திங்கள் பனிரெண்டாம் நாள் ஜனநாயகத் தேர் பலவித இன்னல்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் நடுவே, நிலைக்கு கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. 1972ஆம் ஆண்டுவரை இத் தேர் நிலையில் நிறுத்த வேண்டிய சன்னக் கட்டைகளையும் முளையும்

அடிக்கவேண்டிய பொருப்பு அதில் அமர்ந்திருக்கும் தூசி, அழுக்கு, குழவி, வண்டு, கரையான்கள் அனைத்திற்கும் பொது என்பதை ஒருவரும் மறந்து விடவேண்டாம். இத்தனை பரிவாரங்கள் சூழ நடுவில் காங்கிரஸ் மகாசபையின் பெயரால் இந்திரா காந்தி நடுவில் அமர்ந்து ஆட்சியை நடத்த தலைப்பட்டு விட்டார்கள். 1972ஆம் ஆண்டில் இத்தேர் நல்ல நிலையில் பவனிக்கு அனுப்ப அனைவரும் முயற்சிக்க வேண்டும். அவர்கள் பாதுகாப்பு முயற்சியில் தோல்வி அடைவார்களானால், 1972ல் பவனிக்கு வரும் நேரத்தில் பொது மக்களால் சொல்லடியும், கல்லடியும் பட்டு பொல பொலவென இவர்கள் ஜனநாயகத் தேரிலிருந்து கீழே விழவும் ஏதுவாகலாம். என்பதையும் சிந்தனையாளன் அறிவிக்காமல் இருக்க முடியவில்லை. 1972ஆம் ஆண்டில் தான் இத்தேர் பாரத நாட்டின் பொது தேர் என்பதை உணர்ந்து அதை செப்பனிட்டு யாரிடம் அதை ஒப்புவிக்க வேண்டும் என்பதை தீர்மானித்து, அதை பாதுகாப்பதில் பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பை நல்ல முறையில் நல்குவார்கள் என்பதையும் சிந்தனையாளன் அறிந்து கொண்டிருக்கிறான்.

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்—எல்லோரும் இந் நாட்டு மக்கள்" என்ற பாரதியின் வாக்கின்படி ஜனநாயகத் தேரை பாதுகாக்கவே இன்று பலரை மக்கள் அதில் அமர விட்டிருக்கிறார்கள். அமர்ந்திருப்பவர்கள் இத்தேரை எவ்வாறு அழகுபடுத்துகிறார்கள் என்பதை மக்கள் கவனித்துக் கொண்டேயிருப்பார்கள். ஜனநாயகத் தேரை பாதுகாக்காமல் செல்லரித்து வண்டு துளைத்து, அச்சு ஒடிந்து போகும் அளவுக்கு அமர்ந்திருப்பவர்கள் அதை செய்வார்களானால், ஜனநாயகத் தேர் எங்காவது ஓரிடத்தில் பின்னம் ஏற்படும்முன் அதில் அமர்ந்திருப்பவர்களை யாரென்று பாராமல் நினைத்த மாத்திரத்தில் கீழே தள்ளி குழி தோண்டி புதைத்து இருக்கும் இடம் தெரியாமல் செய்துவிடும் ஆற்றலும் உரிமையும் கொண்டவர்கள் ஜனநாயக மக்கள் என்பதை சிந்தனையாளன் உணருகிறான்.

"ஜனநாயகத்தேர்" இந்நாட்டின் பொது சொத்து. பாரத நாட்டில் பிறந்தவர்களுக்கும், வெளியிலிருந்து இங்கு வந்து குடியேறி பாரத பிரஜையானவர்களுக்கும் சொந்தமானது என்பதை அதில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் கவனத்தில் வைத்துக் கொண்டு ஆட்சியை நடத்த தலைப்பட வேண்டும். இவர்கள் ஆட்சி பாரத மக்கள் அனைவருக்கும் நன்மை தரத்தக்கதாக அமைய வேண்டும். அதில் சற்றேனும் ஏற்றத் தாழ்வோ, சுயநலமோ ஜனநாயகத்தையே குலைத்துவிடும் அளவுக்கு பிறநாட்டின் தலையீடோ இருக்குமாயின், உயிரைக் கொடுத்து அத்தேரினை நிலைநிறுத்துவதற்கு பாரத மக்கள் வீறுகொண்டு எழுவார்கள் என்பதையும் சிந்தனையாளன் தெரிந்து கொண்டிருக்கிறான். ஆட்சியை யார் வேண்டுமானாலும் கைப்பற்றலாம். ஆனால் 'ஜனநாயக சமதர்மம்' இந்நாட்டில் நிலைபெற வழிவகைகளைக் கையாள வேண்டும். அதற்கு இடையூறாக, முதலாளித்துவ ஆட்சி முறைக்கோ, பொது உடமை கொள்கையின் ஆட்சி முறைக்கோ திசை திருப்ப அமர்ந்திருப்பவர்களில் எவர்முயற்சித்தாலும் அவர்கள் அடியோடு அழிந்து போவதோடு அவர்களுக்கு உறுதுணையாயிருந்து வரும் பிற நாட்டினரையும் பாரத மக்கள் விட்டு வைக்கமாட்டார்கள் என்பதை இச்சமயத்தில் ஆட்சியில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் சிந்தனையாளன் உரிமையோடு அறிவிக்கின்றான்.

காங்கிரஸ் மகாசபையின் பெயரால் இருபது ஆண்டுகள் இந்நாட்டில் ஆட்சி எல்லா மாநிலங்களிலும் நடைபெற்றது. 1952-ல் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சியில் அமர்ந்தார்கள். பதவிமோகம் பலருக்கு வரத்தலைப்பட்டது. அந்நாளில். அதனால் நாளாவட்டத்தில் காங்கிரஸ் மகாசபையிலிருந்து பலர் வெளியேறி விட்டனர். காங்கிரஸ், ஆட்சியில் அமர்ந்த நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம், நாட்டில் நல்ல தொழில்கள் இல்லாமை, கல்வியறிவு பெற வாய்ப்பு இல்லாமை. கால் வயிற்றுக் கஞ்சிக்குக் கூட விளைச்சல் இல்லாத நிலவளம், மக்கள் தொகை நாளுக்கு நாள் வளர்ச்சி. இத்தனை இடையூறுகளுக்கிடையே சுதந்திர பாரத ஆட்சி 1952ல் ஜனநாயக முறைப்படி ஆரம்பமாயிற்று. சுமார் பதினைந்து ஆண்டுகள் பலவித சோதனைகளையும் தாங்கி வெளிநாட்டார் நட்புறவுடனும் ஆட்சி நடத்தினார்கள். அதன் பலனால் பல வகையில் இந்நாட்டில் தொழில் வளம் பெருகிற்று. நிலங்கள் வளம் பெற்றன. வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறைக்க முடிந்தது.

சுதந்திரம் கிடைத்த உடனே இந்நாட்டை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்று நேரு பிரான் வகுத்த ஆட்சி முறைக்கு உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் பலர் ஒத்துழைத்தார்கள் என்பதை அனைவரும் அறிவோம். நேரு அவர்கள் தன் மறைவுக்கு முன் நடத்திச்சென்ற காங்கிரஸ் மகாசபையின் மாநாட்டில், இந்நாட்டின் கொள்கை என்ன என்பதை உலகம் அறிய அறிவித்தார். அதுதான் ஜனநாயக சமதர்மம் என்பதை நாம் அறிவோம். 1964க்கு பின், நேருவின் மறைவுக்குப்பின் ஜனநாயக சமதர்மக் கொள்கையை வரவேற்க முடியாமலும், எதிர்ப்பு தெரிவிக்கமுடியாமலும் போயிற்று பலருக்கு என்பதை நாம் அறிவோம். நாடு ஓர் நிலைக்கு உயர்த்தும்வரை இந்நாட்டின் கொள்கையை வரையறுக்காமல் காங்கிரஸ் மகாசபை மூடி வைத்திருந்தது. ஆரம்ப காலத்திலேயே ஜனநாயக சமதர்மம்தான் இந் நாட்டின் கொள்கை என்று பிரகடனப் படுத்தியிருந்தால் இந்நாடு முன்னேற்றத்தைக் காணாமல் மறுபடியும் பிறர் கைக்கு போயிருக்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

காங்கிரஸ் மகாசபை இடை நடுவே பதினைந்து ஆண்டுகள் தனது கட்சியின் கொள்கைகளைத் தளர்த்தி, ஜனநாயக சமதர்மம் என்ற கொள்கையினை தீவிரப் படுத்தாமல் பலருடைய உதவியால் நாட்டின் முன்னேற்றத்தில் கவனத்தைச் செலுத்தி ஆட்சியில் அமர்ந்து நல்ல பல திட்டங்களை உருவாக்கி வைத்தார்கள் அதனால் பல நாட்டினரும் பலவித அன்பளிப்பு கடன் உதவி, உணவுப்பொருள், விவசாயக் கருவிகள், விஞ்ஞானத் தொழிற்சாலைகள் அமைப்பு, பெரிய பெரிய உருக்காலைகள் அமைக்க உதவிகள், யுத்த தளவாடங்கள் போன்றவைகள் நமக்கு எளிதில் கொடுத்தார்கள். அவைகளை பாரத நாட்டில் வைத்து திறம்பட நடத்தி பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டது. உணவும், உடையும், இருக்க இடமும் கல்வி அறிவும் சகல சுதந்திரமும் கொடுப்பதற்கு இந்நாட்டில் மூலதனம் படைத்துள்ள பலரை காங்கிரஸின் பால் சேர்த்து, அவர்களுக்கும் நல்ல வாய்ப்பும் கொடுக்கப்பட்டதும் உண்மையேயாகும், அதன் காரணமாக இன்று நாடு பல வகையிலும் முன்னேற்றம் கண்டு மறுமலர்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பது காங்கிரஸ் மகாசபையின் மகத்தான சாதனைதான் என்பதை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

1964ல் "ஜனநாயக சமதர்மம்" என்று நாட்டில் காங்கிரஸ் மகாசபை பிரகடனப்படுத்திற்று. அன்று முதல் இந்நாட்டில் உள்ள, நாட்டின் நன்மைக்காக பல தொழில்களை உருவாக்கித்தந்து பலருக்கு வேலை வாய்ப்புத் தந்து, தானும் உண்டு கொழுத்து வாழும் பலர், காங்கிரஸ் மகாசபையின் இடமும் அதன் ஆட்சியின் பேரிலும் அருவருப்புக் கொண்டு எதிர்க்கவும் தலைப்பட்டு விட்டனர். இதைக் கண்ட முதலாளித்துவ நாட்டினர்

16-ஆம் பக்கம் பார்க்க

எவ்வளவு குழந்தைகள் வேண்டும்?

யாவருமே கஷ்டம் இல்லாத சந்தோஷமான வாழ்க்கையை விரும்புகிறோம் ■ குடும்பம் மகிழ்ச்சியுடன் விளங்க எவ்வளவு குழந்தைகள் இருக்க வேண்டும்? மணமானவர் களில் மூன்று குழந்தைகள் உள்ளவர்களில் இன்று நூற்றுக்கு எழுபது பேர்கள் மேலும் குழந்தைகள் வேண்டாம் என்றே கருதுகிறார்கள். அநேக குழந்தைகள் இருந்தால் தான் குடும்பத்தில் குதூகலம் இருக்கும் என்ற நம்பிக்கை மறைந்துவிட்டது ■ 'இருக்கும் குழந்தைகள் க்ஷேமமாக இருந்தால் போதும், இனி குடும்பத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்பவர்களுக்கு வழி உண்டு. பல முறைகள் உள்ளன.

இலவசமாக விவரங்களை தெரிந்து கொள்ள

▼ குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கு வாருங்கள்.

DA-66/497

பாரதியாரின் நகைச்சுவை

-[அ வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்]-

★

பாத்திரங்கள் : பின் குரல்
ஒரு குரல் பாடும் பெண் குரல்
குரல் 1
குரல் 2
குரல் 3
குரல் 4

பி. கு தோன்றியது வாழ்க்கைதான்—இங்கு
துன்பத் தோடின்பம் வெறுமையாய்—இவை
மூன்றிலெது வருவாயின்—களி
மூழ்கி நடத்தல் முறை கண்டீர்

கு 1 மக்கள் வாழவேண்டிய முறை பற்றி பாரதியார் செய்த உபதேசமல்லவா இது?

கு 2 ஆமாம் பாரதியார் வாழ்க்கை வாழ்வதற்கே என்று ரசித்து மகிழ்ந்தார்.

கு 1 பாரதியார் மிகவும் துன்பப்பட்டார் என்று சொல்கிறார்களே.

கு 2 உஹூம்... உஹூம்... பாரதியார் கஷ்டப்பட்டார் என்று சொல்வது நீந்தத் தெரியாதவன் நீந்துபவனைப்பார்த்து அவன் தண்ணீரில் தவியாய்த் தவிக்கிறான் என்று சொல்வது போல் இருக்கிறது.

கு 1 பாரதியார் மிகவும் சுகமாகயிருந்தார் என்று சொல்கிறீர்களா?

கு 2 சுகம் என்பது என்ன? மனம் சிட்டுக்குருவி போல பாரமற்று எல்லாவற்றிலும் கலந்து மகிழ்ந்து ஆடிப்பாடி பரவசம் அடைவது தானே....

கு 1 பாரதியார் பட்டகஷ்டமெல்லாம்?

கு 2 ஓகோ! அதுவா, சோற்றுக்கில்லை, கையில் பணமில்லை ஒற்றர் தொந்தரவு இவைகள் தானே ...... இவையெல்லாம்... பாரதியாரின் உள்ளத் திடத்தைக் குறைத்து விடவில்லை. தன்னிச்சையைத் தடுத்துவிடவில்லை. கற்பனையை விரட்டி விடவில்லை. அவரது கவிதைக்கடல் வற்றிவிடவில்லை. இவையனைத்தும் லோகாயதம். வேடிக்கை மனிதரைப்போலே நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ என்று பராசத்தியைக் கேட்கும் திடசித்தர் பாரதியார்.

கு 1 அப்படியா ... பாரதியார் வாழ்க்கை மற்றவரின் வாழ்க்கையைவிட உயர்ந்ததென்று சொல்லுங்கள்...

கு 2 ஆமாம். மக்களின் நிலைகுலைந்த போக்கைக் கண்டு அதிருப்தியும் அதனால் ஏற்பட்ட ஆவேசமும் அதற்குப் பரிகாரம்காண விழைவும் தாபமும் தாபத்தால் சிந்தனையும் சிந்தனையின் விளைவாக கவிதை உபாசனையும் கவிதையின் கருத்தாக ஒளிமிக்க வருங்காலத்திற்கான திட்டமும், திட்டத்தை நிறைவேற்ற மக்களைத் தயார்படுத்தும் பாங்கும் இக்கலைக்கும் மேலான கசப்பான மருந்தை மனித வர்க்கம் இன்னும் நல்லறிவு வளர்ச்சியற்ற சிறு பிள்ளைத்தனத்திலேயே இருக்கிறது என்று கருதி நகைச் சுவையுடன் தன் கருத்தை பாரதியார் சொல்லுகின்ற பாங்கு இருக்கின்றதே, அது ஒன்றே அவரது உயர்ந்த எண்ணத்தை இலட்சியத்தை வாழ்க்கையை எடுத்துக் காட்டுகிறது...

கு 1 பாரதியாருக்கு நகைச்சுவை இருந்ததா... தேச ஆவேசமும் மொழிப் பற்றும் தெய்வ நம்பிக்கையும் அவரது எழுத்துக்களிலே மிளிரும் என்பார்கள், துன்பப் படுவோருக்கும் கவலைப்படுவோர்க்கும் நகைச்சுவை வரவே வராது. நகைச்சுவை இருந்திருந்தால் நீங்கள் சொல்வது போல பாரதியார் வாழ்க்கை உயர்ந்ததுதான்.

கு 2 பாரதியார் நல்ல நகைச்சுவை அனுபவித்தவர், அவரது எழுத்துக்களிலே நகைச்சுவை சிறந்த அம்சமாகவே விளங்குகிறது. புதுவை நண்பர்களை விளக்கெண்ணெய் செட்டியார், வெல்லச்சு, திந்தமியான் சேட்டு, கொங்கணப் பட்டர், ராமராயர், எலிக்குஞ்சு செட்டியார் என்றெல்லாம் பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்...

கு 2 இதைக் கேளுங்கள் வீட்டிலே வேலை செய்யும் வேலைக்காரர்களை பற்றி நாமெல்லாம் நிறைய கேள்விப்படுகிறோம். ஆனால் சொல்லத் தெரியவில்லை. கண்ணன் என் சேவகன் என்ற பாட்டில் பாரதியார் வேலைக்காரனின் இயல்பை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்...

கூலிமிகக் கேட்பார் கொடுத்த
தெலாந் தாமறப்பார்
வேலை மிக வைத்திருந்தால்
வீட்டிலே தங்கிடுவார்
ஏனடா, நீ நேற்றைக் கிங்கு
வரவில்லையென்றால்
பானையிலே தேளிருந்து
பல்லாற் கடித்ததென்பார்
வீட்டிலே பெண்டாட்டி மேற் பூதம்
வந்ததென்பார்
பாட்டியார் செத்துவிட்ட
பன்னிரண்டா நாளென்பார்
ஓயாமற் பொய்யுரைப்பார்
ஒன்றுரைக்க வேறு செய்வார்
தாயாதியோடு தனியிடத்தே
பேசிடுவார்
உள் வீட்டுச் செய்தியெல்லாம்
ஊரம்பலத் துரைப்பார்
எள் வீட்டிலில்லையென்றால்
எங்கு முரசறைவார்
சேவகராற் பட்டசிரம மிகவுண்டு
கண்டீர்
சேவகரில்லாவிடிலோ
செய்கை நடக்கவில்லை.

கு 1 நகைத்தல் - சிரிப்பு ஒலி கை தட்டல்-பேஷ் பேஷ்.

கு 2 இது மட்டுமா—சின்ன சங்கரன் கதை பாரதியார் எழுதியிருக்கிறார் அதில் ஜமீன்தார் ராமசாமியைப் பற்றி ஒரு விமர்சனம் வருகிறது. பேனா சித்திரம் என்கிறார்களே அது இதுதான்.

ஒரு குரல்

மகாராஜா, ராஜபூஜித மகாராஜ ராஜ ஸ்ரீ ராஜ மார்த்தாண்ட சண்டப்பிரசண்ட அண்ட பகிரண்ட கவுண்டராகி கவுண்ட கவுண்டனூராதிபதி ராமசாமி கவுண்டரவர்களுக்கு வயது சுமார் ஐம்பதிருக்கும். நல்ல கருநிறம் நரை பாய்ந்த மீசை கிருதா முன்புறம் நன்றாகப் பளிங்குபோல் தேய்க்கப்பட்டு நடுத்தலையில் தவடு பாய்ந்து, பின்புறம் ஒரு சிறிய முடிச்சுப்போட்டு விளங்கும், முக்கால் நரையான தலை. நெருந்தும் குழிந்த கண்கள் இமைப்புறங்களில் காக்கைக்கால் அடையாளங்கள். பொடியினால் அலங்கரிக்கப்பட்ட மூக்கு, வெற்றிலைக்காவியினாலும், புகையிலைச் சாற்றினாலும் அலங்கரிக்கப்பட்ட பற்கள் குத்துயிரோடு கிடக்கும் உதடு. பிள்ளையார் வயது... ஒரு விதமான இருமல். அரையில் பட்டு ஜரிகை வேஷ்டி. விரலில் நிறைய மோதிரங்கள். பக்கத்திலே வெற்றிலை துப்புவதற்கு ஒரு காளாஞ்சி. இதுதான் ராமசாமிக் கவுண்டர்.

எல்லோரும் விடாமல் நகைக்கிறார்கள்

பெ. கு. குயில் பாட்டில் ஒரு கட்டம். பாரதியாரின் கற்பனைக் குயில் காளை மாட்டைப் பார்த்துக் காதலிக்கிறது. காதல் கொண்ட குயில் கூறுகிறது

... நந்தியே
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும்
காந்தமே
காமனே மாடாகக் காட்சி தருமூர்த்தியே
பூமியிலே மாடுபோற் பொற்புடைய
சாதியுண்டோ?
மானிடருந்தம்முள் வலிமிகுந்த
மைந்தர்தமை
மேனியுறு காளையென்று மேம்பாடுறப்
புகழ்வார்
காளையர் தமுள்ளே கனமிகுந்தீர், ஆரியரே
நீலமுகமும் நிமிர்ந்திருக்கு
கொம்புகளும்
பஞ்சுப் பொதி போற்படர்ந்த திருவடிவம
மிஞ்சுப் புறச் சுமையும் வீரத்திருவாலும்
வானத்திடிபோல மா வென்று முழுவதும்
ஈனப் பறவை முதுகின் மிசையேறி
விட்டால்
வாலைக்குழைத்து வளைத்தடிக்கு
நேர்மையும் பல
காலநான் கண்டு கடுமோகமெய்தி
விட்டேன்

எல்லோரும் பலே பலே. நகைத்தல்.

கு 2 சின்ன சங்கரன் கதையில் ஜமீன்தார் ராமசாமியைப்பற்றி இன்னும் கேளுங்கள்.

ஒரு குரல் ஜமீன்தார் கச்சேரி முடிந்தவுடன் குதிரை வண்டியிலேறி ஊரைச் சுற்றி சவாரி செய்துகொண்டு வருவார். கவுண்டநகரம், சரித்திரப் பெருமை, க்ஷேத்திர மகாத்தியமும் வாய்ந்த ஊராயினும், அளவில்மிகவும்சிறியது. ஐந்துநிமிஷத்தில் குதிரை வண்டி ஊரைச் சுற்றி வந்துவிடும். இதற்கு பன்னிரண்டிடத்தில், வாங்கா ஊதுவார்கள்.

கு 1 வாங்கா வா .... அது என்ன வாத்தியம்.

கு 3 ஓ ... அதுவா ... வாங்கா என்பது பித்தளையால் ஒருவித ஊது வாத்தியம். ஜமீன் தாரவர்களின் வண்டி முன்னே அவரது வேலையாட்கள் சிலர் குடல் தெரிக்க ஊதிக்கொண்டு ஓடுவார்கள் ...

கு 1 அப்படியா...

கு 2 சில சமயங்களில் பல்லக்கு சவாரி நடக்கும். இன்னும் சில சமயங்களில் ஆட்டு வண்டி சவாரி கிளம்புவார் ....

கு 1 அது என்ன? ஆட்டு வண்டியா சவாரியா ......

கு 2 ஆமாம் ... இரண்டு ஆடுகளைப் பழக்கப்படுத்தி, அவைகளை ஒரு சிறு வண்டியிலே பூட்டி, வண்டி ஆடுகள் இவற்றைச் சேர்த்து நிறுத்தால் அவற்றைக் காட்டிலும் குறைந்தபக்ஷம் நாலு மடங்கு அதிக நிறை கொண்ட ஜமீன்தார் ஏறிக்கொண்டு தாமே பயமில்லாமல் ஓட்டுவார்...

கு 1 பயமில்லாமலா...

கு 2 ஆமாம்...குதிரையானல் அது ஒரு சமயமில்லாவிட்டால் மற்றொரு சமயம் கடிவாளத்தை மீறி ஓடி எங்கேனும் வீழ்த்தித் தள்ளிவிடுமல்லவா .. ஆனல் ஆடுகளின் விஷயத்தில் அந்த சந்தேகமில்லையல்லவா?

கு 1 ஜமீன்தார் ராமசாமி குதிரை சவாரி செய்வதே இல்லையா?

கு 2 செய்வார். இவருக்கென்று தனியாக ஒரு சின்னக்குதிரை. அதன் உயரம் ஆட்டை விட சற்று உயரம். அதன் மேல் ஜமீன்தார் ஏறி உட்கார்ந்தவுடனே அதற்கு முக்கால் வாசி மூச்சு நின்றுபோகும். பிரச்சினை கொஞ்சம்தான் மிஞ்சியிருக்கும்.

கு 1 பிறகு பயப்படாமல் சவாரி செய்வாரா?

கு 2 ஆமாம் .. இவருடைய பயத்தை உத்தேசித்தும் குதிரையை எப்படி நகர்த்திக்கொண்டு போக வேண்டுமென்பதற்காவும் முன்னும் பின்னும் பக்கங்களிலும் ஏழெட்டு மறவர்கள் நின்று அதை தள்ளிக்கொண்டு போவார்கள் ...

கு 1 விகடராமன் குதிரைக் கதை போலல்லவா இருக்கிறது? பிறகு

கு 2 ஜமீன்தார் கடிவாளத்தை ஒரு கையிலும் தன் உயிரை மற்றொரு கையிலும் பிடித்துக்கொண்டு பவனி வருவார் இவ்வாறு ஒரு நாள் நடந்தால் இரண்டு மூன்று வருடங்களுக்கு இதைப்பற்றி நினைக்கமாட்டார் ...

கு 1 பிறகு என்ன நடக்கும்?

கு 2 என்ன இருந்தாலும் ஜமீன்தார் க்ஷத்திரியர் அல்லவா? பயந் தெளிந்த பிறகு பின்பொருதடவை ஊர்வலம் நடைபெறும்.

அறி! ஒருநாள் வேதபுரத்தில் வீதியிலே ஒரு பண்டாரம நன்ருகப் பாட்டுப் பாடிக் கொண்டு வருகிறன்.

தோகை மேலுலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவ தெமக்கு வேலை

கு 2 யாரப்பா பண்டாரம் உனக்கு எந்த ஊர்?

ஒரு குரல் நடுப்பட்டி

கு 1 நாமம், திருநீறு குங்குமப்பொட்டு எல்லாம் அணிந்திருக்கிருயே நீ எந்த மதத்தைச் சார்ந்ததோ?

ஒரு குரல் வைசாக்தம்...

கு 4 [சிரிப்புடன்] வைசாக்தம்... ஆமாம், அதற்கு அர்த்தமென்ன?

ஒரு குரல் வைஷ்ணவ — சைவ — சாக்தம்

கு 4 இந்த மதத்தின் கொள்கையென்ன?

ஒரு குரல் விஷ்ணு தங்கை பார்வதி, புருஷன் சிவன். எல்லா தெய்வங்களும் ஒன்று ஆதலால் தெய்வத்தை நம்பவேண்டும் செல்வத்தை சேர்க்க வேண்டும் இப்படிதான் எங்கள் மதத்தின் கொள்கை.

கு 2 இந்த மதத்தை ஏற்படுத்தியது யாரோ?

ஒரு குரல் முன்னேர்கள் உண்டாக்கினது. தனித்தனியாகவே நல்ல மதங்கள் மூன்றையும் ஒன்று சேர்த்தால் மிகவும் நன்மையுண்டாகுமென்று எனக்குத் திருப்பதி வெங்கடேசப்பெருமாள் தில்லை நடராஜனும் கனவிலே சொன்னர்கள்... ஆதலால் ஒன்ருகச் சேர்த்தேன் ...

எல் அப்படியா ... பலே பலே பலே ....

கு 2 மற்றொரு நாள் பாரதியார் நின்றிருந்த இடத்திற்கு குள்ளச்சாமி அழுக்கு மூட்டையுடன் வந்தார். வந்தவரை பாரதியார் கேட்கிருர் ....

கு 1 குள்ளச்சாமியையா ......பாரதியாரின் குருவல்லவா அவர் என்ன கேட்டார் பாரதியார்?

கு 2 என்னவா? சாமி இப்படிப் பிச்சை வாங்கித் தண்டச்சோறு தின்றுகொண்டு ஜீவனம் செய்கிறீர்களே, ஏதேனும் தொழில் செய்யக் கூடாதோ?

கு 1 ஆம். இந்தக் கேள்வியை அன்று டம் நாம் நமது வீட்டுவாயில் வரும் பிச்சைக்காரர்களைக் கேட்கிறோம் அதற்கு பதில்என்னவோ?

கு 2 பதிலா... நான் ஐம்புலன்களாகிய கழுதைகளை அடக்கி அந்தக் கரணமான துணிகளை வெளுக்கிறேன் ... எனக்கு சலவைத் தொழில்...

கு 1 அப்படியென்றால்—

கு 2 எந்தத் தொழிலும் யாரும் செய்யலாம். ஆனால் மனிதன் முதலில் எல்லாவிஷயங்களிலும் சுத்தமாக இருக்கவேண்டும்.

கு 1 ஞானமார்க்கத்தில்செல்பவனுக்கு வழி என்னவோ?

கு 1 அதுவா... அவன் முதலில் நாவை வெளுக்கவேண்டும். பொய்புறம் பேசுதல் முகஸ்துதி. தற்புகழ்ச்சி இவைகளை அறவே ஒழிக்கவேண்டும். இதுதான் சலவைத் தொழிலின் தொடக்கம்...

கு 1 நல்லது.. ஒவ்வொரு ஞானியும் சலவைத் தொழிலாளியாகத்தான் இருக்கவேண்டுமோ?

கு 2 ஆம்...முதலில் இவற்றை சுத்தப்படுத்தினால் தானாக அவன் அந்த கரணமும் சுத்தமாகும்...

கு 1 அதுசரி ஆனால் சில இடங்களில் பொய் சொல்லித்தீரும்படியாக நேரிட்டால் என்ன செய்வது?

கு 2 அப்போது மௌனத்தை கடைப்பிடிக்கவேண்டும். அப்படியும் முடியவில்லையானால் உண்மைதான் பேசவேண்டும்.

கு 1 எனக்குப் புரியவில்லையே ..

கு 2 உனக்குப் புரியாது...ஏனென்றால் அதைப்புரிந்துகொள்ள உண்மை விரதம் அவசியம். உச்சிமீது வான் இடிந்து விழுந்தபோதிலும் அச்சமில்லை என்று எந்த நேரத்திலும் உண்மைபேசி உண்மையாகிற தெய்வத்தை காணமுயல வேண்டும் ஏனென்றால் தெய்வம் உண்மை.

கு 4 சரி அந்தக் கரணத்தை வெளுக்க வேண்டும் என்றீர்களே...

கு 2 அதுவா ... அந்தக்கரணத்தை சுத்தமாக்குவது, வெளுத்தலாவது அதிலுள்ள பயத்தை நீக்குவது. அப்படிச் செய்தால் விடுதலையுண்டாகும்...

கு 4 இப்போது புரிந்துவிட்டது. கசப்பான உண்மையிலேயே சிறிப்புத் தேனிலே கலந்துகொடுத்துவிட்டார் பாரதியார்...

பி.கு. குடுகுடு குடு குடு குடுகுடு

ஆண் நல்லகாலம் வருகுது நல்ல
காலம் வருகுது
ஜாதிகள் சேருது ...
சண்டைகள் தொலையுது
சொல்லடி சொல்லடி சக்தி
மாகாளீ

கு 1 ஏதேது நேற்றைக்கு காலை இந்த வீதியில் வந்தான் இன்றும் வருகிறான்...

கு 4 ஆம்... இவன் மேல் துணிமூட்டை இல்லை? வெள்ளை வேஷ்டி. வெள்ளைச் சட்டை. சிவப்பு தலைப்பாகை பெரிதாகவும் கட்டிக் கொண்டு அரிசிமூட்டையில் பாதி நடந்துவருவது போலிருக்கிறது...

கு 3 அது மட்டுமா...சிவப்புநிறத்துக்கு ஏற்ற குங்குமப் பொட்டு, கிருதா மீசை, பெரிய முகம் நெட்டையான உருவம், தடியன்....

கு 1 காலிலே ஹைதராபாத் ஜோடும் மாட்டியுள்ளான்...

கு 3 பெரிய மிருதங்க வித்வான் போலல்லவா வேலை செய்கிறான்... உடுக்கையில்

கு 1 குடுகுடுப்பை நீ எந்த ஊர்...?

ஒ.கு. எங்கள் தொழிலுக்கு ஊரேது? வீடேது?

கு 1 அப்படியென்றால் உன்னுடைய இந்த விதமான உடைகள்?

ஒரு ஆம்.. என்னுடைய பரம்பரைத் குல் தொழில் இது. நான் இங்கிலாந்து பிரான்ஸ் ஐரோப்பா முதலிய இடங்களுச் சென்றிருக்கிறேன்.

கு 1 அப்படியா ... பேஷ் உலகம் சுற்றிய குடுகுடுப்பாண்டி நீ ரொம்ப பணம் சேர்த்திருப்பாயே ... கம்பனத்தார் தானே? உலகம் சுற்றியுமா குடு குடுப்பையை ஆட்டுகிறாய்...?

ஒ.கு. பணம் இருக்கிறது...ஆனால் ஜாதி தொழிலை விடாமல் செய்கிறேன்

கு 1 அப்படியென்றால் உனக்குப் பல பாஷை தெரியுமென்று சொல்...

ஒ கு எனக்கு இங்கிலீஷ் நன்றாகத் தெரியும். அனேக புஸ்தகங்கள் வாசித்துள்ளேன் ஆனால் இங்குள்ள ஜனங்களையும் மேல் நாட்டினரை, [illegible] பொறுத்துதில்லையே... இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து—என் பாரம்பரிய தொழிலை ஏற்று ஜனங்களைத் திருத்த முயலுகிறேன

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணை செய்யவேண்டும்.

குடுகுடு குடுகுடு குடுகுடு குடு
சாமி மார்க்கெல்லாம் தைரியம் வளருது
பயந்தொலையுது பாவந் தொலையுது
சாத்திரம் வளருது, சாதி குறையுது
வீரம் வருகுது மேன்மை கிடைக்குது
சொல்லடி சிவசக்தி மலையாள பகவதி
தர்மம் பெருகுது தர்மம் பெருகுது.

கு 2 இந்த நேரத்தில் ...

தெருப்பஜனை கோஷ்டியாக
பாடிக்கொண்டு வருகிறார்கள்

செல்வத்திருமகளைத்— [illegible]டு
சிந்தனை செய்திடுவோம்

செல்வமெலாந் தருவாள்—நமதொளி
திக்கனைத்தும் பரவும்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

கு 3 நம. பார்வதி பதயே...

எல்லோரும் ஹர ஹர மகாதேவா

கு 2 சர்வத்ர கோவிந்தநாம சங்கீர்த்தனம்...

கோவிந்தா கோவிந்தா

கு 1 கோவிந்தா தெருவிலே உன்னைச் சத்தம் போட்டு கூப்பிடுகிறார்கள். போய் என்ன என்று கேள் ஓடு

கு 3 ஏன் கூப்பிட்டீர்கள்? ஏன் கூச்சல் போடுகிறீர்கள் ... நான்தான் வந்துவிட்டேனே! சங்கதியைச் சொல்லுங்கள் —

கு 2 உன்னையாரும் கூப்பிடவில்லையே

கு 3 கோவிந்தா கோவிந்தா என்று நீங்கள் எல்லோரும் கூப்பிட்டதாக பார்த்தசாரதி சொன்னாரே?

[எல்லோரும் நகைக்கிறார்கள்]

சர்வத்ர கோவிந்தநாம சங்கீர்த்தனம்

முற்றும்

(நன்றி "வானொலி")

ரேடியோ நாடக விழா-1967

★

திருச்சி வானொலி நிலையம் 19-2-67 முதல் 24-2-67 முடிய ரேடியோ நாடக விழாவை விமரிசையாகக் கொண்டாடியது

ஒலி பரப்பான நாடகங்கள் ஆறு. மனோதத்துவம், இலக்கியம், சரித்திரம், சமூகம், நகைச்சுவை, துப்பறியும் நாடகம் என்று பல்வேறு சுவையுள்ள நாடகங்களை ஒலிபரப்பி ரசிகர்களுக்கு நாடக விருந்தளித்தனர்.

மூடு பனி

19-2-67ல் ஒலிபரப்பாகிய முதல் நாடகம்.

தனது வெளித் தோற்றத்தால் அனைவரது அனுதாபத்தையும் பெறும் கருணாகரன் என்ற இளைஞன் அந்தரங்கத்தில் கொலைவெறி, பணவெறி, மிருகவெறி கொண்ட கொடியவனாக இருப்பதைச் சித்தரித்தது நாடகம்.

நல்ல நாடக அமைப்பு. சுவையான வசனம், சுறுசுறுப்பான போக்கு. இந்நாடக ஆசிரியர் திரு. எஸ். பூமிநாதன் பாராட்டுக்குரியவர்.

கருணாகரன் புதுமையான பாத்திரப் படைப்பு.

"தனிமைச் சூழலில் தவிக்கும் போதும் உன்னால் சிரிக்கமுடிகிறதே கருணாகரா" என்று கருணாகரன் அனுதாபத்துக்குரியவனாக இருக்கும் போதும்,

"காரணத்திற்கு உருவம் கொடுத்தால் அது காசு பணமாக இருக்கும்" என்று கருணாகரன் தன் வெறித்தனத்தைக் காட்டும்போதும் அருமையான வசனங்கள் அமைந்திருந்தன.

கருணாகரன் பாத்திரமேற்றிருந்த தென்னூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி மிகச் சிறப்பாக நடித்தார். தனது மாறுபட்ட இருவித குணங்களையும் மாற்றிமாற்றி அவர் உருவகப்படுத்தியது ரசிகர்கள் உள்ளத்தில் கிளர்ச்சி மூட்டியது.

லலிதாவாக நடித்த திருமதி எம். சுசீலா ஓர் மிருகத்திடம் சிக்கித் தவித்த தவிப்பும் தன் பிள்ளைக்காக தான் எவ்வித கஷ்டத்தையும் ஏற்கத் தயாராக இருக்கும் உறுதியையும் சிறப்பாக நடித்துக் காண்பித்தார்.

மற்றும் திருமதி எஸ். கே. சுமதி, மீனாக்ஷிசங்கர், திரு. ஆர். முத்து சுப்பிரமணியம் முதலானோர் நன்கு நடித்தார்கள்.

திரு. எஸ்.எஸ். பரமசிவம் பிள்ளை அவர்களின் இசை அமைப்பு நாடகத்திற்கு நல்ல ஜீவன் அளித்தது. மொத்தத்தில் புதுமையான பாத்திரப் படைப்பைக் கொண்ட நல்ல கருத்தமைந்த சமூக நாடகம் மூடு பனி.

கலாவதி

20-2-67ல் ஒலிபரப்பான இலக்கிய நாடகம்.

பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி எழுதிய சரித்திரப் பின்னணி கொண்ட நாடகம். முழு மேடை நாடகத்தையும் அதன் சுவையும், இலக்கிய வடிவமும், நாடக ஆசிரியரின் வசன பாணியும் சிறிதும் கெடாமல் ஒரு மணி நேர வானொலி நாடகமாக அமைத்து அளித்தவர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார். மிகச் சிரமமான இப்பணியைச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

நாடக உலகில் பின்னுக்குப் பல்லாண்டு சென்று அன்று சிறந்து விளங்கிய ஓர் நாடகத்தை ரசிகர்களுக்கு நினைவுபடுத்தி ரசிக்கத் தூண்டியது ஓர் நற்பணியாகும். அப் பெரும் பணியை திருச்சி வானொலி நிலையத்தாரும், திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும் திறமையுடன் செய்திருந்தார்கள். பாராட்டுதலுக்கும், நன்றிக்கும் உரியவர்கள்.

நாடகம் ஆரம்ப முதல் இறுதி வரை விறுவிறுப்பாகச் சென்றது.

சயதுங்க சோழனாக நடித்த திரு. எம். எஸ். ரமணி தமது கம்பீரக் குரலாலும்; சிறப்பான நடிப்பினாலும் பிரமாதப்படுத்தினார்.

சிதாநந்தனாகத் தோன்றிய நெய்வேலி ஏ. ராஜேந்திரன் தனது பாகத்தைத் திறம்படச் செய்தார்.

கலாவதியாகத் தோன்றிய திருமதி T. M. கமலா கலாவதியாகவே மாறி காதல், சோகம், மகிழ்ச்சி இவைகளை நன்கு வெளிக்காட்டினார்கள்.

மனோமோகினியாகத் தோன்றிய திருமதி ஆர். முத்துநாச்சியார் ரகோத்தமன் வில்லியாகக் காட்சியளித்தார்.

மற்றும் திருச்சி சந்தர், எஸ். சந்தான ராஜகோபாலன், எம். பி. அன்புமுத்து முதலானோரும் நன்கு நடித்தார்கள்.

கர்நாடக நாடகத்திற்கு இசை அமைக்கும் பொறுப்பேற்றிருந்த திரு. எஸ். வி. பார்த்தசாரதி நாடகத்திற்கு சிறப்புச் செய்திருந்தார்கள் தமது கர்நாடக இசையினால். சோலைக் காட்சிகள், மற்போர் காட்சி முதலியவை நன்கு ஒலிப்பரப்பாகியது.

தகுந்த Effects கொடுக்கப்பட்டிருந்தது. காட்சிகளை மேடையில் காணும் பிரமையை ஏற்படுத்தியது. நல்ல முயற்சி.

நாடகத்தின் உச்ச கட்டம் Climax இன்னும் விறுவிறுப்பாக அமைந்திருக்கலாம். சுகசரீரன் சிதாநந்தனைக் கொல்ல நினைத்து மாற்றுடையில் வந்த குலாந்தகனைக் கொல்வதும் சிதாநந்தன் சுகசரீரனைக் கொல்வதும் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கலாம்.

நாடகம் நல்ல முயற்சி, சிறந்த வெற்றி.

அன்பின் அலைகள்

மனதின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் மனோதத்துவ நாடகம். 21-2-67ல் ஒலிபரப்பாகியது.

மாஜிஸ்டிரேட்டின் மனைவி கீதா தன்னுடைய கணவனுக்குத் தெரி

யாமல் ரவிக்கு உதவி செய்ய விரும்புகிருள். அதனுல் பல சிக்கல்கள் விளைகின்றன இறுதியில் ரவிக்கும், கீதாவிற்கும் உள்ள உண்மை உறவு வெளிப்படுகிறது. இருவரும் சகோதரர்கள் என்பது புலனுகிறது.

இந்தப் புதிர் இறுதிவரை கொஞ்சம் கூட வெளிப்படாமல் கடைசியாக வெளிப்படும்படி காட்சிகளை அமைத்து தகுந்த வசனங்களைத் தக்கபடி கையாண்டிருந்தது நன்ருக அமைந்திருந்தது. சிக்கலான இம்மனேதத்துவ நாடகத்தைத் திறம்பட எழுதி திரு. பட்டுக்கோட்டை சி. பி. குமாரவேலு தனது திறமையைப் பூர்ணமாக காண்பித்துள்ளார் இதன் மூலம்.

நாடகம் சிற்சில இடங்களில் மிகவும் வேகமாகச் சென்றது. அதைத் தவிர்த்திருக்கலாம். மாலா கீதாவிடம் தன் சந்தேகத்தைத் தெரிவித்த உடன் அவள் புரிந்து கொள்ளும்படி செய்தது சரியாக அமையவில்லை.

ஒரு மாஜிஸ்ட்ரேட்டும் மனிதன் தான். அவனுக்கும் கொலை உணர்வு வரலாம். ஆனுல் அதை நாடகத்தில் சித்தரித்தது அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல. தவிர்த்திருக்கலாம்.

கீதாவாக நடித்த சந்திரகாந்தாவின் நடிப்பு சிறப்பாக இருந்தது. ரவியாகத் தோன்றிய திரு. M.V.K. ஜெயராமனும், மூர்த்தியாக பாகமேற்ற திரு. T. P. நடராஜனும் நன்கு நடித்தார்கள்.

இசை அமைப்புப் பரவாயில்லை.

எனக்கென்று நீ இருக்கையில்

22—2—67ல் ஒலிப்பரப்பாகிய ஓர் துப்பறியும் நாடகம் நல்ல முயற்சி.

சந்திரன் ஒரு நேர்மையுள்ள மில் தொழிலாளி. துரைசாமியின் சதியால் கொலைகாரனுக ஆக்கப்பட்டு தண்டிக்கப்படுகிருன். அதுவரை அவனை நேசித்துவந்த உஷா அவனை மறக்கிருள். மனதிலேயே அவனைப் போற்றி வந்த உமா அவனுக்குக்காகவே தான் இருப்பதை வெளியிடுகிருள். துப்பறியும் நிபுணரால் சந்திரன் நிரபராதி என்பது விளங்குகிறது.

கதை வசனத்தை நன்ருக அமைத்திருந்தார் திரு. வை. ராமமூர்த்தி.

45 நிமிடங்களில் முடிவுற்ற இந்நாடகத்தை ஒருமணி அவகாசம் கொடுத்து துப்புத்துலக்குவதை இன்னும் இரண்டொரு சம்பவங்கள் மூலம் நன்ருக விளக்கி இருந்தால் துப்பறியும் நாடகம் என்பது நன்கு பதிவாகி இருக்கும். ஏமந்தா ஒரு கடிதத்தில் பாதி எழுத்துக்களை வைத்துக் கொண்டு துப்பறிவதாகக் காட்டியது சற்று சப்பென்று இருந்தது.

சந்திரனுக நடித்த திரு. ஆர். தங்கராஜூ, நன்ருக நடித்தார். இறுதியில் அவருக்காகக் காத்திருக்கும் உமாவை அடையாளம் கண்டு கொண்டு மனசாந்தி பெரும்போது உணர்ச்சிகரமாகச் செய்திருந்தார். சுந்தர மூர்த்தியாக நடித்த திரு. டி. எஸ். எம். சுந்தரம் மில் முதலாளியாகவே காட்சி அளித்தார். துரைசாமியாக நடித்த திரு. டி. செல்லக்குட்டி பரவாயில்லை.

உஷாவின் நடிப்பில் உணர்வு இருந்தது. உமாவின் நடிப்பில் உருக்கம் மிளிர்ந்தது.

சூறைக்காற்று :

23-2-67 அன்று ஒலிபரப்பான சரித்திர நாடகம். கர்ணபரம்பரைக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு தஞ்சையை ஆண்ட நாயக்க அரசனின் வீரத்தையும், பரந்த மனப்பான்மையையும் விளக்கிய சிறந்த நாடகம்.

சம்பவக் கோர்வையில்லாமல் ஓரே ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு திறம்பட நாடகத்தை அமைத்திருந்தார் திரு எஸ். வெங்கடாசலம். நறுக்குத் தெரித்த நல்ல வசனம். கருத்துமிக்க உரையாடல்.

ரெகுநாத நாயக்கராக நடித்த திரு கிம்சி சீனிவாசன் மிகத் திறம்பட நடித்தார். பரந்த மனப்பான்மையையும், வீரத்தின் செரிவையும் அருமையாகக் காட்டினுர்.

துளசம்மாவாக நடித்த தெரியா சுந்தரம் தன் கணவனுக்காக வாதாடிய கட்டங்களில் நடிப்பின் சிறப்பைக் காட்டினுர்.

கலாவதியாக நடித்த திருமதி வீரம்மா கலாவதியாகவே மாறியிருந்தார். தன் தந்தை சூது செய்ததை அறிந்து அவர் பொங்கிய போதும், காதல் உரையாடல் புரிந்தபோதும் சிகரமாக இருந்தது.

மற்றும் திரு. எம். விஸ்வநாதன் கே.ஏ.எஸ். புஹாரி, ஜி. துளசிதாஸ் முதலியோர் நடிப்பும் பரவாயில்லை.

நாடகத்திற்கு சிறப்பூட்டியது இசை அமைப்பு, நல்ல சந்தர்ப்ப இசைகள். இனிய அமைப்பு. இசை அமைத்த திரு. எஸ். எஸ். பரமசிவம் பிள்ளை பாராட்டுக்குரியவர்.

போர்களம் effects, வாள் வீச்சுக்கள் நன்ருக இருந்தது. மீனச்சாட்சியுடன் போராடும் கட்டங்கள் வெகு ஜோர்.

கதை அமைப்பு, வசன நடை, நல்ல நடிப்பு, சிறந்த இசை, தயாரிப்பில் கவனம் அத்தனையும் அமைந்த சிறந்த நாடகம் சூறைக்காற்று

பொல்லாத கோபிதானம்மா

இசையும், நகைச்சுவையும் கலந்த நல்ல பொழுதுபோக்கு நாடகம்.

நகைச்சுவை கொப்பளித்தது இசை இனித்தது.

இதை அமைத்த திரு என். ராகவனுக்கு பாராட்டுகள்.

மாப்பிள்ளைக்கு தோழனுகச் சென்ற மணவாளன் முதலில் மணம் புரிந்துகொள்வது சிரிக்கத் தூண்டிய சிறந்த அமைப்பு.

மணவாளனுக நடித்த திரு. டி. வி. கிருஷ்ணமூர்த்தி குலுங்கச் சிரிக்கவைத்தார் நாடக முழுவதும்

ருத்ரமூர்த்தியாக நடித்த திரு. கே. கே. பெருமாள் கண்டிப்பையும் கராரையும் கடைசிவரை அருமையாகச் சித்தரித்தார்.

அல்லி, லல்லிகளாக நடித்த என். சுசீலா, ஆர். சரோஜா நன்ருக நடித்தார்கள்.

காரில் வருவார் போடி, தூக்கிய காலரை, மாப்பிள்ளை வாங்க, முத

வியவை நல்ல பொழுது போக்கு நகைச்சுவைப் பாடல்கள்.

இதற்கு இசை அமைத்திருந்த திரு. ஏ. பாலகிருஷ்ணன், அபாரம் அற்புதம்.

நல்ல பொழுது போக்கு நாடகம்.

ரேடியோ நாடக விழாவில் ஒலி பரப்பாகிய ஆறு நாடகங்களையும் ரசிகர்கள் நல்விருந்தாதகக் கருதி ரசித்திருப்பார்கள். ஒரு நாடகம் கூட சோடையாகவில்லை

தயாரிப்பாளர் திரு. கோவிந்த ராஜ் அவர்கள் மூடுபனி, கலாவதி சூறைக்காற்று முதலிய மூன்று நாடகங்களையும் தயாரித்திருந்தார். நல்ல முயற்சி. திறம்பட தன் பணியை நிறைவேற்றி யிருந்தார். அவர் தயாரித்தளித்த கலாவதி, இலக்கிய நாடகமும், சூறைக்காற்று சரித்திர நாடகமும் தயாரிப்பிற்கு சிறந்த எடுத்துக் காட்டுகள். அதில் சூறைக்காற்று மிகச் சிறந்த இடத்தைப் பெற்றது என்று கூறலாம். திரு. கோவிந்தராஜ் அவர்கள் நமது பாராட்டுகளைப் பெறுகிருர்கள்.

அன்பின் அலைகளைத் தயாரித்தவர் திரு. டி. வி. கிருஷ்ணமூர்த்தி, சிறமமான மனோதத்துவ நாடகத்தை அருமையாகத் தயாரித்திருந்தார். அனுபவமுத்திரை பளிச்சிட்டது அவர் தயாரிப்பதில்.

துப்பறியும் நாடகமாகிய எனக்கென்று நீ இருக்கையில் திரு ஏ. நடராஜன் அவர்கள் தயாரித்தளித்தது நல்லமுயற்சி. நல்ல தயாரிப்பு.

இசையும் நகைச்சுவையும் கலந்த சிறந்த பொழுது போக்கு நாடகத்தைத் தயாரித்தளித்தவர் திரு. பி. ஜே. தாஸ். சிறந்த தயாரிப்பாளர் என்பதை நிரூபித்துள்ளார்.

இத்தகைய நல்ல வாய்ப்பை ரசிகர்களுக்கு அளித்த வானொலி நிலையத்தாருக்கும், நிலைய நிர்வாகிக்கும் நமது நன்றி கலந்த பாராட்டுகள்.

ரா. நீலமேகம்.

திருச்சி பாரதன்

"பலாப்பழம்" பரிசு பெற்றது

அப்பாவின் ஆசை — தன் மகன் நல்லவனாகவும் சாமர்த்தியசாலியாகவும் அதிர்ஷ்டம் உடையவனாகவும் வளரவேண்டும் என்று கருதுவார்கள் என்பது திருச்சி "பாரதன்" விஷயத்தில் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறதை பார்க்கும்பொழுது திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் பெருமகிழ்வு கொள்கிருர்கள். திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைச் செயலாளரும், குழந்தைக் கவிஞரும், ரா. தங்கவேலன் என்னும், திருச்சி 'பாரதன்' ஓர் அதிர்ஷ்டசாலியாக வளர்ச்சிபெற்று முன்னேற்றப் பாதையில் குழந்தையாகவே யிருந்து அடையும் பரிசுகளைக் கண்டு "எழுத்தாளன்" பூரிப்படைகிருன்.

1965 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்காக என்று எழுதப்பட்ட "அப்பாவின் ஆசை" நாடகத்தை டி. கே. எஸ். சகோதரர்கள் நல்ல முறையில் நடிக்கும் நாடகமாகத் தயாரித்து நாடக உலகுக்கு அளித்து தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தின் பரிசையும் பெற்ருர்கள் அப்பாவின் ஆசை" நாடகத்தைப் பார்த்த தமிழ் மக்கள் அனைவருமே அதை பாராட்டினுர்கள் அதைப் போன்ற பல நாடகங்கள் "பாரதன்" எழுத வேண்டும் என்று அவாவும் கொண்டார்கள்.

டி. கே. எஸ் சகோதரர்களின் முழு ஆதாவும், தமிழ் அறிஞர்களின் ஆசியும் "பாரதன்!" பெற்றதால் மேலும் நல்ல நாடகங்களை குழந்தைகளுக்கு எழுதும் பணியில் ஈடுபட்டார். 1967 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்காக "பலாப்பழம்" என்ற நாடகத்தை திருச்சி "பாரதன்" நாடக இலக்கிய உலகுக்காக தயாரித்து டி. கே. எஸ். சகோதரர்களிடம் வழங்கினர். டி. கே. எஸ். சகோதரர்கள், அந்நாடகத்தை அன்புடன் எற்று தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தின் போட்டிக்கு அனுப்பி விட்டார்கள். "பலாப்பழம்" வேண்டாத பாலருமுண்டோ? தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தார் "பலாப்பழம்" கிடைத்தவுடன் நன்ருக அதை ரசித்துப்பார்த்து ரூ 4,500/- பரிசும் வழங்கியிருக்கிருர்கள் இவ்வாண்டில். நாடகத் தயாரிப்புக்கு ரூ 4500-00ம் நாடக அரங்கேற்றச் செலவுக்காக ரூ 500-00ம் ஆக ரூ. 5000—00 "பலாப்பழம்" அடைந்திருக்கிறது. நாடகத்தை உருவாக்கிய திருச்சி "பாரதன்" அவர்களுக்கும், பரிசு பெறும் அளவுக்கு நடிக்கும் நாடகமாக்கித் தந்த டி. கே. எஸ். சகோதரர்களுக்கும் எங்களது பாராட்டுகள்.

மேலும் மல்லியம் ராஜகோபால் எழுதிய "ஜீவனும்சம்!" என்ற நாடகத்தை திரு சகஸ்ரநாமம் அவர்களின் ஸேவா ஸ்டேஜ் நாடகக் குழுவினரும் தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தின் பரிசு ரூ. 4500-00ம் அரங்கேற்றச் செலவும் அடைந்திருக்கிறது.

அமுது அமெச்சூர் நாடக மன்றத்தினரால் குடியாத்தம் நாகராஜ் எழுதிய "சேவகன்" நாடகத்துக்கும், தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தின் பரிசான ரூ. 1500 கிடைத்திருக்கிறது இவ்வாண்டில்.

தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தார் நல்ல நாடகங்களைத் தமிழ் உலகுக்கு வழங்குபவர்களுக்கு பரிசு அளித்துவரும் வழக்கத்தை மேற்கொண்டிருப்பதால், நல்ல நாடகங்கள் உருவாக்குவதற்கு நாடகாசிரியர்களுக்கும், நாடகக் குழுவினருக்கும் உற்சாகத்தை அளித்து வருகிறது.

தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தாரின் முயற்சிக்கு நமது பாராட்டுகள்

— டி. எல். பஞ்சாபகேசன்.

"எழுத்தாளன்"
(மாத-இதழ்)

ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் விலை தனி.

விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக் கடைத்தெரு,
திருச்சி-2.

THE ART OF GOVERNMENT

—[By KODUMUDI RAJAGOPALAN]—

(Continued from February Issue)

Legislature debates are now considered to be on a par with dramatic entertainment. Ministers and members must so deport themselves as to falsify this view. Members must not speak or ask questions in a haphazard and vulgar manner. Ministers, too, must not reply in proud manner.

When the legislature has to advise the government on its policies and when it has to enact laws for the good of the people, it must behave in a majestic manner. The members unite the people and the government. So they should behave with integrity and responsibility. They must always be in constant touch with the people and must participate in the daily lives of the people. They express the people's will in a clear and courageous way so that the cabinet may be impressed by the strength of public opinion voiced through the representatives.

Once the elections are over, whether as Ministers or members they should eschew party politics in the administration. Though the party system is the basis of parliamentary democracy, the government though it may be composed of a single party should not descend to a tyrannous or police rule.

The head of state must never allow the government to pass draconian laws to stifle opposition which is constitutional. If this warning is ignored the government becomes a violent demon in the hands of the party in power.

Each party may have its own political, social and economic programme. That way alone it presents itself before the people during the elections and seeks the electorates acceptance of its policies. When, with an adequate majority, it forms the government, it does so and reamins in power only so long as it retains the confidence of the people. Instead, if the party which comes into power through parliamentary means, throws all political traditions to the winds and becomes a one-party dictatorship, then such unconstitutional acts will have to be resisted by the people with all the might in their power.

When we consider the question of loyalty to the state, we must not allow our minds to be confused. We must consider the true meaning of loyalty is to the state as a permanent national institution and expression of the people's will and not to the government which is for the moment in power. We must distinguish the government from the state. It is dangerous to suggest that the people's loyalty should be to the party in power or to the party which is likely to be in power.

While we have the undoubted right to instal a party as the government after expressing our confidence in it and while we have equally the right to replace it with another when the government is inimical to our interests, we must never ignore or act with disrespect to the government. So when I insist on loyalty to the constitution, I mean the loyalty which it is the duty of every citizen to feel uninfluenced by his party affiliation.

The people need not blindly support the policies of the party in power. This is the real basis of pure democracy. There must be an alternative government if the people support its policies at the time of the elections. This capacity to change government when they lose the confidence of the people is a sine quo non of democracy. Every citizen must have equal opportunities to mobilise public opinion on political, social and economic issues. Only when a constitution ensures such a way for the expression of the people's will does a true democracy is formed.

The following particulars regarding the ownership of the 'EZHUTHALAN' (எழுத்தாளன்) the monthly newspaper, are published as called for by rule 8 of the Registration of newspapers (Central) Rules, 1956.

FORM IV.

1.	Place of Publication:	Tiruchirapalli.
2.	Periodicity of Publication:	Monthly
3.	Printer's name, Nationality & Address	A. V. R. Krishnaswamy, Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2
4.	Publisher's Name, Nationality & Address	Do.
5.	Editor's Name, Nationality & Address	Do.
6.	Name and address individuals who own the News paper and partners of shareholders holding more than one percent of total capital	A. V. R. Krishnaswamy, Kannan Press 24, Theradi Bazaar Tiruchirapalli-2.

I, A. V. R. Krishnaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 15—3—67.

A. V. R. KRISHNASWAMY,
Signature of Publisher.

The Poser and the Solution

—[V. GANESA IYER]—

★

Among the myriads of professions and callings available in life, that as a Public Servant has never been alluring to many of prodigious talents and outstanding merit. Nevertheless, common experience has been, that by force of circumstances, a good many of such persons find themselves hustled into apparently cosy positions in official life; but actually many of them are rather in the parlous state of a square peg in a round hole. I have often fancied what an inestimable asset some of these brilliant 'gems of the purest ray serene' of profound scholarship and talents could have been to the world of Thought and Knowledge, if only they had continued to 'drink deep of the Pierian Spring' instead of allowing themselves to be lured into the gilded shackles of the sterile and vegetative office of a Civil servant be it even as members of the covenanted service (I C. S.), the impregnable steel frame of the erstwhile British Empire. But instances of a fiery patriot like Subhash Bose spurning scornfully the delights of office in the steel frame, or more recently of a veteran administrator like a Kamath breaking the gilded shackles of office as he 'could not scribble away his birth—right in a pile of papers' are sure pointers that the dull, monotonous, insipid life of a Public Servant, (in whose case a day represents the whole of his life) however high the office may be, can ill-afford to co-exist harmoniously with other more pronounced and compelling laudable proclivities. But any general rule cannot pass acceptance unless accompanied by exceptions and provisos; and there have been quite a few cases where such officers have sought to enliven their dull and dreary official life, with agreeable doses of grace, erudition and culture they have sedulously developed in their lives.

Mr. Bhaskara Tondaman, I.A S., of hallowed memory, was Deputy Collector in Tirdivanam Division in South Arcot Dt., in the latter forties. I have had the privilege of serving under him in several capacities; and later it was given to me to be a fellow-traveller with him in the enthusing, interminable march in the field of culture Mr. Tondaman was a servant steeped in Culture; and he was a grand votary of Kambar of the 'Rasikamani' School. The robes of office sat very lightly on him; and he was rather a boisterous, exuberant extrovert, in a post where the officers were then generally expected to cultivate a certain remoteness. He had quite an easy way of negotiating with men and things in a manner peculiarly his own, revealing in every detail the rich culture he was imbued with. Quite a mine of information and literary wealth he was, that he can with ease and knowledge dwell on any subject coveringthe whole gamut from potato to philosophy, touching en-route the much-dreaded field of politics too. A discussion with him on any subject was a voyage of discovery.

Those were days of intensive procurement of food-grains from the producers, as the Govt. had to wage a grim battle in the food-front in the wake of the attainment of Independence by 'Bharat'. I was the officer in charge of procurement work in a Taluk in the jurisdiction of Mr. Tondaman. Procurement in those days was a thorough-going affair; and Mr. Tondaman felt it his pleasurable duty to visit the nook and coner in his jurisdiction with us on the thankless procurement work, lightening our never too pleasant work with his native wit humour and pleasantry appropriate to the occasion, with extensive quotations from Kambar Nayanmars, Shakespeare. Shelly etc.

It was in one of the hot months of 1948. Mr Tondaman was combing my entire area in his programme of intensive procurement as the target fixed for me was rather high. He would get into the actual field with me and my associates, and guide us with on-the-spot advice and directions. Our efforts at reaching the target had therefore been quite a success. After heavy and wearisome procurement work one day, Mr. Tondaman, myself and some of my colleagues, returned to head-quarters late in the day. After a hurried snack, we got together round him, and were giving ourselves to quite an easy vivacious conversational spree, in which Mr. Tondaman heartily joined in a spirit of camaraderie, without compromising his official dignity. The talks would generally be of a discursive nature; and such easy get-together was rather a regular feature, and was felt quite welcome too, if only to break the monotony of the daily official routine. That day agreeably there was an intense disquisition on the word 'procurement' in all its connotations and ramifications, throwing open all manner of vistas and possibilities; and this provided a welcome occasion for our versatile boss to descant elaborately on the word in all its amplitude, in his own inimitable way, with agreeable zest and understandable enthusiasm, be-sprinkling his observations with extensive quotations and citations. The discussions as they developed were amusing and enlivening, as well as rewarding; and the group of my compeers gathered there enjoyed some innocuous fun at my expense, as I was the procurement officer for the Taluk. By this time the daily tapals had come and the camp clerk of the Dy. Collector was opening them as per stading instructions to him with the assistance of the liveried duffadar donning a musty head-gear. In the multitude of the tapals from the Collector's office, one sealed envelope addressed by name to Mr. Tondaman dropped down. The ever vigilant camp clerk examined the envelope and after a through examination of the seals and scrutiny of the address, passed it on to Mr. Tondaman through the livieried peon, who handed it over to the master with an air of seriousness, addressing him in the conventional form: 'Sahib, sealed tapal Collector' Mr. Tondaman, with an air nonchalance, just ran his eyees over the address in the envelope and then handed back to the duffadar with directions to open it. The dutiful duffadar, as if preparing himself for performing a major operation, adjusted his head-gear and pulled the badage of glittering livery tight over his shoulders, and took a dash into the camp office to to secure a scissor. With a demure,

impassive, long-drawn face, the duffadar slowly and carefully ripped open the mouth of the envelope in all ritualistic solemnity as the wax seals thereon cracked and crumbled. He pulled out carefully the contents, the nature of which had set us all hazarding wild conjectures, and handed it over to the master respectfully, withdrawing himself into the room of the camp clerk to resume normal tapal opening work. It was just a communication from the Collector in quarter sheet of paper which Mr. Tondaman started reading with evident seriousness, as we (the rest of us in the room) were looking on simmering in uncetain conjectures as to the import of that mysterious missive from the top, some twiddling their thumbs restlessly, and some others mopping their brows. As Mr. Tondaman was nearing the end of the communication, his countenance started beaming with smiles. By a dart of the mind, he took his pen, the mighty pen that had profusely enriched Tamil and English literature and figured no less prominently in the field of his work as a First Class Magistrate!, and jotting down a brief reply, he flung the paper on us with agreeable freedom, exclaiming: 'Look here? Something spicy for you. Read it.'

The communication from above had drawn the attention of Mr. Tondaman to a publication in a weekly or daily (I am not sure) with startling headlines bringing to the notice of the authorities the 'concatenation' of nine officers of different Departments, belonging to the Brahmin community, in that particular Taluk at that time; and wondering whether the authorities would care to take appropriate action in the matter. The names of the nine officers and the offices held by them had also been mentioned in the communication as published in the journal. We immediately got a copy of the said journal, and quite surprisingly found the names of the nine officers and the posts held by them set out therein with meticulous care and precision Of course, my name found mention in that glorious list. The Collector had enquired of Mr. Tondaman, whether in the light of what had been published in the journal, he would like to have some of the officers transferred from the Station. It was just a matter of fortuitous coincidence that the nine officers of the Brahmin community happened to be serving in the particular Station; and it was neither designed by the authorities nor sought by the officers concerned. What had happened in the normal course of events had come to be viewed with such dismay, as was not in evidence even at the time of the conjunction of the eight planets a few years back. Mr. Tondaman, being in a jaunty, sprightly mood, asked one of us to read to the hearing of the group, the communication and his reply which was remarkably telling and preciously brief; and was to the effect: 'The Heavens have not fallen and will not fall by such combination Things are quite all right here'. Hardly had we finished reading the reply than Mr. Tondaman burst into a Homeric laughter, in which all of us heartily joined

The sad sands have since run quickly through Time's glass; and looking back now in the evening of my service; I am still wondering at the import and significance of the laconic reply given by Mr. Tondaman which will be germane for all time and how quickly and resourcefully and in a forthright manner he solved a problem posed by the publication in the journal. A rare type of officer Mr. Tondaman was, he has since vanished into the mists of history; and reminiscing now after nearly two decades, I echo with Shakespeare: 'When will come such another?'

Note:- Taken from the Souvenir of the 13th Anniversary celebration of the Young Men Brahmin Association, Madurai.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த சேவா தளத்தின்மீதே அவர்கள் நாட்டியமாடியே தீர வேண்டும். அவர்களின் நாட்டியத்தை நாடகத்தை, நாட்டுமக்கள் பார்த்து ரசிப்பார்கள். ரசிக்கட்டும்.

அண்மையில் அரசியல் அறிவினால் ஆட்சி மாற்றம் நடைபெறவில்லை. அரிசிப்பஞ்சத்தினால் ஆட்சி மாற்றம் நடைபெற்றிருக்கிறது. இன்று ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆட்சி பீடம் ஏறுவதற்கு எந்த சுற்று நிலை, சூழ்நிலை அறியாமையினால் உதவி செய்ததோ அதுவே அவர்கள் வீழ்ச்சிக்கும் வழி வகுக்கும் என்பதை திண்ணமாக நம்பலாம்.

காங்கிரஸ் அமைதியாக, நிதானமாக முன்னைக் காட்டிலும் தேசபக்தியோடு, தெய்வ நம்பிக்கையோடு நாட்டு மக்களிடம் தாங்கள் இதுவரை செய்த காரியத்தை எடுத்து உரைப்பதற்கு ஆக்க பூர்வமான அரசியல் விழிப்பு நாட்டில் ஏற்படுத்துவதற்கு ஓர் தெய்வீக சக்தியே காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சி பொறுப்பிலிருந்து விடுதலை அளித்திருக்கிறது.

சுருக்கமாகச் சொல்லப் போனால் தன்னலமற்ற தொண்டர், மக்கள் மனதிலே மகத்தான இடம் பெற்ற தலைவர் காமராஜரின் வெற்றிகரமான திட்டம் இனிமேல்தான் தொடங்கப் போகிறது. அந்த நல்ல தேச சேவையில் ஈடுபட தேச இளைஞர்களும், சிந்தனையாளர்களும், மாதர்களும், மக்களும் ஈடுபடப்போகும் மகத்தான காட்சியை இப்பொழுது மனக்கண் முன் காண்கிறேன்.

தமிழகத்தில் எப்பொழுதும் புதுமையும், புத்துணர்வும் பெற்று பாரத நாட்டிற்கு வழிகாட்டும் தனித்தன்மை படைத்திருப்பது என்பதை இந்த நேரம் நாம் காணப் போகிறோம். நாம் பாக்கியசாலிகள். பெருந்தலைவர் காமராஜ் உயிருடன் இருக்கும்பொழுது தமிழகத்தில் அரிசிப் புரட்சி தோன்றியது அரசியல் ஞானம் வளர வழி வகுக்கும் என்பதை திண்ணமாக நம்பலாம்

சத்தியத்திற்கும், உண்மையான சேவைக்கும் என்றுமே தோல்வி கிடையாது. நமக்குத் தோல்வி ஏது?

"விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி
தோன்று மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங் கனகமா
ளிகையு முண்டாம்
அளக்கருள் தீதுற்றாலும் அச்சமே
யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பார்
துயருண்டோ
துணிவுள் ளோர்க்கே?" – பாரதி

ஜனநாயகத் தேர்

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் இடம் தங்கள் அனுதாபத்தையும், உறவையும் வளர்க்க முன் வந்துள்ளனர். 1967ல் ஜனநாயகத் தேரை கவிழ்த்துவிட அவர்கள் செய்துள்ள சூழ்ச்சிகளும், பொருள் செலவும் செய்தித் தாள்களில் தினம், தினம் வந்து கொண்டிருப்பதைக் கவனித்தால் ஒவ்வொரு குடிமகனும் தாங்கள் செய்த தவற்றை உணர்ந்து வருத்தப்படவும் முன்வந்து விட்டான்.

ஒரு ஊரில் உள்ள "கோவில் தேர்" புறப்பட்டு சிறிதுதூரம் நகர்ந்து வந்தவுடன் இழுத்துச் சென்று நிலை நிறுத்த ஆட்கள் இல்லாமல் நின்று விடக் கூடியவாறு இருக்கும் நிலையில், பக்கத்து சிற்றூர்க்காரர்கள் பலர் திரண்டு வந்து அத்தேரை இழுத்து நிலைக்கு நிறுத்தி விட்டுச் செல்லும் வழக்கத்தை நாம் காண்கின்றோம். அதுபோன்று 1967ஆம் ஆண்டில் ஜனநாயகத் தேர் பவனி வந்து அமர்ந்திருக்கிறதை நாம் காண்கின்றோம். கோவில் தேர் நடுவில் நின்று பக்கத்தூர் மக்கள் உதவியால் நிலைக்கு திருத்தப்பட்டாலும், அத்தேர் பக்கத்தூர் மக்களுக்குச் சொந்தமாகாது. அதுபோல் ஜனநாயகத் தேர் இந்நாட்டு மக்களின் பொது சொத்து என்பதை அதில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் அறிவார்கள் என்பது நமக்குத் தெரியும். நல்லதோர் ஆட்சியின் திறமையினால் அத்தேர் நல்ல முறையில் அழகுபடுத்தப்பட்டு பலவித முன்னேற்றத்துடன் 1972ல் பவனி வரும் என்று நம்பி ஜனநாயகத் தேரை வாழ்த்தி வரவேற்று நமது ஆதரவை நல்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

தடி கொண்டோ, வாள் கொண்டோ, குண்டு போட்டோ எதிரிகளைக் கொல்லாமல், அவர்களுக்குச் சிறிதளவும் தீங்கும் செய்யாமல், அஹிம்சை எனும் ஆயுதம் ஏந்தி, சாத்விகம் எனும் கொள்கை பற்றி, சத்யாக்ரஹம் எனும் போர் தொடுத்து, காந்தி எனும் சாந்த சொரூபி வாங்கித் தந்த சுதந்தர பாரதத்தின் "ஜனநாயகத்தேர்" உலக மக்கள் அனைவராலும் காக்கப்படும் "தேர்" என்பதை நாம் மனதில் உறுதிகொண்டு நேர்வழியில் நமது கடமைகளைச் செய்தால் உலகுக்கு ஓர் எடுத்துக் காட்டாக பாரத நாடு அதிவிரைவில் நல்ல ஒளியோடு விளங்கப் போவதையும் நாம் காணவிருக்கின்றோம். என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தரும மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்;
காலமாறும்,
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்.

என்ற பாரதியின் வாக்கினை நம்பி மகாத்மா நமக்குப் பழக்கி விட்டுச் சென்ற வழியில் நமது பணிகளை செவ்வனே செய்ய நாம் அனைவரும் முற்படுவோமாக.

வயலூர் வடிவேலா!

★

துயர் கண்டு மனம் வாடி...

துயர்கண்டு மனம் வாடிக்
துடித்தேன்
தூயதமிழ் இசைத்திடவும்
மறுத்தேன்
பயிராகி அனல்பட்டுக்
கறுத்தேன்
பழிகேட்டு உலகத்தை
வெறுத்தேன்
மயிலாடி வரக்கண்டு
திகைத்தேன்
மதியாடி உடலாடிச்
சிலிர்த்தேன்
வயலூரில் சுடர்கண்டு
சிரித்தேன்
வடிவேலா? உனையின்று
அணைந்தேன்.

அருணகிரி யுனது......

அருணகிரி யுனது
அருகினிலே யமர்ந்து
பெருமையுற்று உயர்ந்தான்-தமிழ்ப்
பாடிவாழ்வில் சிறந்தான்

உருகும்வித மடியார்
உளங்களிலே நிறைந்து
பெருகுமிசை பொழிந்தான்—என்
புத்தியிலுங் கனிந்தான்!

தருவாய்ப்பே ரருளை
தயவாயெனக் கெனவே
குருவேயுனை யடைந்தேன்—அருட்
குமராஅடி விழுந்தேன்

கருவதோ ஆசை?
கழறுவதோ மேலும்
தருணமிதோ வாராய்—எழிற்
தங்கும்வய லூரா.

ஆறு கடந்தேன்

ஆறு கடந்தேன்
அடவி கடந்தேன்
அழகான நெடுஞ்சாலை
அதனைக் கடந்தேன்
சேறு கடந்தேன்
செழுமை சடந்தேன்
சிறுபாதை கற்களொடு
முட்கள் கடந்தேன்
நீறு அடைந்தேன்
நெற்றி அணிந்தேன்
நிகரில்லா ஒளிபாய்ச்சும்
கோயில் அடைந்தேன்
பேறு அடைந்தேன்
பெருமை அடைந்தேன்
பிழையில்லா வயலூரன்
காட்சி செழுந்தேன்.

—திருச்சி பாரதன்

அவனே கவிஞன்

எடுப்பு

அவனே கவிஞனென்பேன்
அமுதாய்ப்பாடி அணையாவிளக்காய்......அவனே

மேலெடுப்பு

கவரும் நம்மொழியைக் கள்ளாய் மாற்றினான்
காதில் அதனைத்தமிழ்க் கவியாய் ஊற்றினான்......அவனே

முடிப்பு

பாரதிக்கே அவன் பலவகையில் தாசன்
பாவலர்க்குள் அவன் பணியா அரசன்
ஊரதிரபல உண்மைகள் சொன்னவன்
உயிர்க்கவி யாக இன்றைக்கும் உள்ளவன்......அவனே

- கவிஞர் இளங்கம்பன்

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press
24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan.